Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ
(சி-1431)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 24 (22.09.2003) திங்கட்கிழமை இதழ்: 352

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே, ஜப்பானை வெளியேறக் கோரி

## ஜே.வி.பி. தலைமையில் சிங்களவர் அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம்!



அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் சில காட்சிகள்.



(மெல்போர்ண்)

நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கையின் சமாதான முயற்சியிலிருந்து வெளியேற வேண்டும் எனக் கோரியும், விடுதலைப் புலிகளின் கைகளில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நூற்றுக்கு மேற்பட்ட சிங்களவர்கள், ஜே.வி.பியின் தலைமையில், அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அவுஸ்திரேலியாவின் தலைநகர் மெல்போர்ணிலுள்ள அந்த நாட்டின் நாடாளுமன்றத்துக்கு முன்னாலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் எதிரான அமைப்பு, ஜே.வி.பி., அவுஸ்திரேலியாவிலுள்ள சமாதான மற்றும் மனித உரிமைகளுக்கான அமைப்பு என்பனவே இந்த எதிர்ப்பு ஊர்வலத்துக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தன.

அவுஸ்திரேலியாவில் இயங்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பிரதேசத்தில் இயல்புநிலை, சட்டம் ஒழுங்கை

# இறுக்கமாகப் பேணக்கூடிய கட்டமைப்பை நிறுவிக்கொள்வதே தலைமையின் விருப்பம்!

### கொழும்பு தொலைக்காட்சிக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

**தமிழர் தாயகப் பிரதேசத்தில் இயல்புநிலையைக் கொண்டுவந்து, சட்டம் ஒழுங்கை இறுக்கமாகப் பேணக்கூடிய கட்டமைப்பொன்றை நிறுவிக்கொள்வதுதான் எமது தலைமைப் பீடத்தின் விருப்பம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு தொலைக்காட்சி ஒன்றுக்கு பிரத்தியேகமாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாயகப் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற கொலைக்குற்றங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்படுகின்றதே என ஊடகவியலாளர் கேட்டபோது, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறான கொலைகள் கண்டிக்கப்பட வேண்டியவை, நிறுத்தப்பட வேண்டியவை. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இவ்வாறான குற்றங்கள் சுமத்தப்படுவதுதான் எமக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் தருகின்றன.

தமிழர்கள் தாயகப் பிரதேசத்தில் இயல்புநிலையைக் கொண்டுவந்து சட்டம் ஒழுங்கை இறுக்கமாகப் பேணக்கூடிய கட்டமைப்பை நிறுவிக கொள்வதுதான் எமது தலைமைப் பீடத்தினதும் பொதுமக்களினதும் விருப்பமாகவுள்ளன. இங்கு நடக்கின்ற குழப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லுக்கான உத்தரவாத விலை தமிழீழ நிதித்துறையால் நிர்ணயம்!

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை:

## விசாரணையை துரிதப்படுத்த அடையாள மறியற் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்துமாறு வலியுறுத்தியும், அந்த விசாரணை மந்தகதியில் நடைபெற்று வருவதைக் கண்டித்தும் அடுத்த மாதம் 19 ஆம் திகதி யாழ்.பஸ்நிலையப் பகுதியில் அடையாள மறியற்போராட்டம் ஒன்றை நடத்த வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

சங்கப் பணிமனையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு அடுத்த மாதம் 19 ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், படுகொலை தொடர்பான விசாரணை மந்தகதியிலேயே இடம்பெற்றுவருகின்றது.

விசாரணையைத் துரிதப்படுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பட வேண்டியவை. தமிழீழ விடுத

டம் ஒழுங்கை இறுக்கமாகப் பேணக் கூடிய கட்டமைப்பை நிறுவிக கொள் வதுதான் எமது தலைமைப் பீடத்தின தும் பொதுமக்களினதும் விருப்பமாக வுள்ளன. இங்கு நடக்கின்ற குழப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

யில் நடைபெற்று வருவதைக் கண் டித்தும் அடுத்த மாதம் 19 ஆம் திகதி யாழ்.பஸ்நிலையப் பகுதியில் அடையாள மறியற்போராட்டம் ஒன்றை நடத்த வட இலங்கை பத்திரிகை யாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

திகதியுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், படுகொலை தொடர்பான விசாரணை மந்தகதியி லேயே இடம்பெற்றுவருகின்றது.

விசாரணையைத் துரிதப்படுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நெல்லுக்கான உத்தரவாத விலை தமிழீழ நிதித்துறையால் நிர்ணயம்!

## ஒரு கிலோ 11 ரூபா 50 சதமென அறிவிப்பு

ஒரு கிலோ நெல்லுக்கான உறுதியான விலை 11ருபா 50 சதம் என தமிழீழ நிதித்துறை அறிவித்துள்ளது.

தற்போது வன்னியில் ஒரு மூடை நெல் (70 கிலோ) 650 ரூபாவுக்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதனால் நெற்செய்கையில் ஈடுபடுவோர் முதலீட்டையே இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையை நீக்கும்பொருட்டு நெல்லுக்கான ஆகக்கூடிய உறுதி செய்யப்பட்ட விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் ஒரு கிலோ நெல்லை 11ருபா 50 சதத்திற்கு குறையாத விலையில் கொள்வனவு செய்யுமாறு வணிகர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி அறிவித்துள்ளார்.

அத்துடன் வன்னியில் தேங்கிக்கிடக்கும் சம்பா நெல்லை எளிதாகச் சந்தைப்படுத்துவதற்காக சம்பா நெல் மீதான ஏற்றுமதித் தீர்வை அறவீடு நாளை முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இடைக்கால நிர்வாக யோசனை:

# இறுதி முடிவுகள் பற்றி ஆராயவென புலிகள் குழு அயர்லாந்து செல்லும்!

விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள வடக்கு கிழக்குக்கான புதிய இடைக் கால நிர்வாக யோசனை குறித்த சில இறுதி விடயங்களை சர்வதேச பிரதிநிதிகளுடன் ஆராய்ந்து முடிவு செய்வதற்காக, விடுதலைப் புலிக ளின் பிரதிநிதிகள், அயர்லாந்தின் டப்ளின் நகர் செல்லவுள்ளனர்.

இன்னும் ஒருசில நாட்களில் இடம்பெறவுள்ள இந்த உயர் மட்டச் சந்திப்பில், புலம்பெயர் நாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் கிளை நிறுவனங்களின் பிரதான

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புதிதாக எந்த முகாமையும் புலிகள் அமைக்கவில்லை!

## திருமலை நிலவரம் குறித்து கண்காணிப்புக்குழு பேச்சாளர்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக எந்தவொரு முகாமையும் புலிகள் அமைக்கவில்லையென, போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின பேச்சாளர் அக்னஸ் பிறகடோரயர் தெரிவித்தார்.

திருகோணமலை - வான் - எல பகுதியில் விடுதலைப் புலிகள் புதி தாக முகாம்களை அமைத்துள்ள தாக பொதுஜன ஐக்கிய முன்னணி சுமத்திய குற்றச்சாட்டை மறுத்தே கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் இவ் வாறு தெரிவித்தார்.

வான் - எல பகுதியில் புலிகள் புதிதாக முகாம் அமைத்துள்ளார் கள் என்ற எந்தத் தகவலும் எமக் குக் கிடைக்கவில்லை. நாம் அந்தப் பகுதிக்குச் சென்றுபார்த்தபோது புலி களின் முகாம் எதுவும் அங்கு தென் படவில்லை.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர் பாக எமக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளன. எமது ஒன்பது கண் காணிப்பு அலுவலகங்கள் திருகோண மலையில் உள்ளன. இவற்றில் 6 தரைக் கண்காணிப்பு அலுவலகங் களும், 03 கடல் கண்காணிப்பு நிலையங்களும் அடங்கும். ஆனால் விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த மீறல் நடவடிக்கைகள் எதனையும் நாம் காணவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்ச் செல்வனுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ் சன் நடத்திய கலந்துரையாடலில் இவை தொடர்பான விடயங்களை ஆராய்ந்துள்ளார்.

கண்காணிப்புக்குழுவின் நடவ டிக்கைகளுக்கு தமது சமாதானச் செயலகம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என தமிழ்ச்செல்வன் உறு தியளித்துள்ளார் என, அவர் மேலும் தெரிவித்தார்.

### விண்ணாணம் விநாசியர்



மருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய் எண்டது சரியாப் போச்சு....!

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளிய
உங்கள் தோழன்

# சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் பெற தலைவர் நல்ல திட்டங்களைத் தீட்டியுள்ளார்!

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(நவிண்டில்)

**வடக்கு - கிழக்கில் விளையாட்டுத்துறையை நல்ல நிலைக்கு எங்களால் கொண்டுவரமுடியும். குறிபார்த்துச் சுடுதல், நீச்சல் போன்ற போட்டிகளிலும் எமது மக்களிடம் திறமை இருக்கிறது. சர்வதேசரீதியில் தங்கப் பதக்கம் எம்மாலும் பெறமுடியும். தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இவற்றுக்கான நல்ல திட்டங்களைத் தீட்டியுள்ளார் என, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்தார்.**

மாவீரர் நினைவாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் வடமராட்சி மாவீரர் துயிலுமில்ல புனரமைப்புக்குழு நடத்திய யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்புவிழா கடந்த புதன் கிழமை வதிரி பொமேர்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கலந்துகொண்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

வடமராட்சி மாவீரர் துயிலுமில்ல புனரமைப்புக் குழுவினர் நல்ல முயற்சி ஒன்றைசெய்துள்ளனர். இங்கு சில முக்கியமான விடயங்களை நான் உங்களுக்கு எடுத்துக்கூறலாம் என நினைக்கிறேன். விளையாட்டு என்பது மனித ஆரோக்கியத்திற்கும், சுக வாழ்விற்கும் வெற்றி தேல்வியைப் பகிர்ந்து கொள்கின்ற மனித எண்ணத்தோடு இணைகின்ற விடயம். விளையாட்டைப் பொறுத்தவரையில், வடக்கு - கிழக்கு சர்வதேச அளவில் வரவேண்டும். இதை சாதிப்போம் என உறுதி கூறுகின்றேன்.

விளையாட்டைப் பொறுத்தவரை நாங்கள் தனித்துவத்தை பேணவேண்டும். தமிழ் வீரர்கள் விளையாட தென்னிலங்கையில் இருப்பது போல வடக்கு - கிழக்கில் பயிற்சித் திடல்கள் இல்லை. இதற்காக நாங்கள் சிங்களவர்களை நம்பியிருக்க வேண்டியதுமில்லை. எங்களது வலைப்பந்தாட்ட அணி லண்டனில் 18 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்றதுடன் - இறுதியாக கறுப்பினத்தவர்களையும் வெற்றிகொண்டு வீறுநடை போட்டதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

இங்கு வந்திருக்கும் பெருந்திரளான மக்களினதும், வயது வந்தவர்களினதும் ஆர்வத்தைப் பார்க்கும் போது, எங்களிடம் இருந்து விளையாட்டுக்கள் கவிழ்ந்துபோகும் வாய்ப்பில்லை.

உங்களது ஒத்துழைப்பும், ஒத்தாசையும் ஆக்கபூர்வமான சிந்தனைகளும் கிடைக்கும்போது, சர்வதேசப் போட்டிகளில் வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. போட்டிகளை யாழ்ப்பாணத்தில் வைக்க வேண்டும் என்று திடீரென சிங்களவர்களுக்கு என்ன ஞானம் பிறந்தது?

நாங்கள் சிங்கள அரசாங்கத்திற்கு எதிராக மோதிக்கொண்டிருந்தவர்கள்தான். ஆனால், விளையாட்டுக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள விளையாட்டு வீரர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல. சமாதானம் தொடர்ந்தால் - இடைக்கால நிர்வாகம் ஏற்பட்டால் - எங்களை நாங்களே ஆளும் சூழ்நிலை ஏற்படும்போது - விளையாட்டுக்கள் மென்மேலும் வளரும்.

பார்வையாளர்கள் ரசிக்கத் தான் வேண்டும். ஆனால் சச்சரவுகள் ஏற்படுத்தக்கூடாது.

விளையாட்டு வீரர்கள், விளையாட்டை சரியான முறையில் கற்க வேண்டும். இங்கிருந்து வெளிநாடு சென்றவர்கள், அவர்களும் தமிழர்கள்தான். அவர்கள் பந்துகளை உள்வாங்குவதும் தன்னிடம் பந்துகள் வைத்திருப்பதையும் வெளிக்காட்டினார்கள். இங்கிருந்து வெளிநாடு சென்ற நம்மவர்களின் விளையாட்டு நுட்பம் எங்களிடம் இல்லை. விளையாட்டைப் பொறுத்தவரை பல குறைபாடுகள் எங்களிடம் இருக்கின்றது. விளையாட்டு மைதானம் ஒத்துழைக்காமல் இருக்கலாம். இதற்காக பந்தை வானத்தை நோக்கி அடிப்பது விரும்பத்தகுந்ததல்ல. இன்று வெளிநாட்டு வீரர்களின் விளையாட்டைப் பார்க்கும்போது, அங்குள்ள வீரர்கள், உயர உயர பந்தை அடிப்பதை பார்க்கவே முடியாது.

நம்நாட்டு வீரர்கள் மற்றைய அணி கோலை அடிக்கக் கூடாது என்பதற்காக பந்தை மேல்நோக்கி அடிப்பதால், விளையாட்டை ரசிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இப்படியிருக்கும் பல குறைபாடுகளை கட்டம் கட்டமாக நிவர்த்திசெய்ய வேண்டும்.

வெளிநாட்டு வீரர்கள் பந்துகளை தங்கள் காலின் கீழ் வைத்தும் பந்துகளை தங்கள் கால்களால் காற்றிலே அடித்துக்கொண்டிருப்பதையும் நாங்கள் காணலாம். தாங்கள் விரும்பும் பொழுதுதான் பந்தை நிலத்தில் விடுவார்கள். பந்துதான் விளையாட்டு வீரனுக்கு அடிமையாக இருக்க வேண்டுமேதவிர, பந்துக்கு விளையாட்டு வீரர் அடிமையாக இருக்கக் கூடாது. இதற்கான திறமைகளை கற்றுக்கொள்ள வேண்டுமென விளையாட்டு வீரர்களை கேட்டுக்கொள்கிறேன்.

உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட வீரர்களையும் - வீராங்கனைகளையும் வெளிநாட்டுக்கு அனுப்ப உத்தேசித்துள்ளோம். சமாதானம் நீடித்தால் கரப்பந்தாட்ட, கிரிக்கெட் வீரர்களையும் வெளிநாட்டிற்கு அனுப்பவுள்ளோம். விளையாட்டுக்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம். கற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும்.

வடக்கு - கிழக்கு தமிழர்கள் சர்வதேச அரங்கில் பல சாதனைகளை சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

### சன்னம் வெடித்து காயம்

வளவினுள் காணப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தை கழற்ற முற்பட்ட வேளை, அது வெடித்ததில் கைவிரல்கள் சிதைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சாயில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கே.சிவசங்கர் (வயது 29) என்பவரே கைவிரல்கள் சிதைவடைந்தவராவார். (111)

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று 14 வயதுக்குட்பட்ட அரை இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி அரைஇறுதிப் போட்டிகள் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரியும், இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தை எதிர்த்து புனித ஜோசப் வித்தியாலயமும் மோதவுள்ளன.

❖ ❖ ❖

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இன்று பி.ப.1.30 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில், 16 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து கனகரட்ணம் மத்தி மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

### பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் பேரதெனிய பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 12 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணி பி.திலீபன் தலைமையில் 18 வீரர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தப் போட்டியில் பங்குபற்றச் செல்லவுள்ளனர்.

## நெகிழ்வுப்போக்கை கடைப்பிடித்தாலே சுதந்திரக் கட்சியுடன் மீண்டும் பேச்சு!

### ஜே.வி.பி. அறிவிப்பு

கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டுமென, ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்திருக்கின்றன. ஆனால், நாட்டின் பாதுகாப்பையும், இறைமையையும் கருத்திற்கொண்டு எதிர்க்கட்சிகள் இன்று செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா திஸநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி சம்பந்தமான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெறக் கூடாது என்று பலரும் எண்ணியிருந்தனர். அதற்காக கூட்டணி தொடர்பான தவறான பிரசாரங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறனதொரு நிலையில் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையிட்டு அதிருப்தி தோன்றினாலும், எங்கள் நிபந்தனைகளை விட்டுக்கொடுத்து சுதந்திரக் கட்சி போன்ற மிகப்பெரிய தேசியக் கட்சியுடன் இணையமுடியாது. எவ்வாறாயினும் சுதந்திரக் கட்சி நெகிழ்வுப்போக்கை கடைப்பிடித்தால், பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

### நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் உயிரிழந்த இருபது மாணவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு தினம் இன்று நண்பகல் 12 மணிக்கு புலோலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.


நம்பமுடியாத விலையில் PIV கணனிகள்



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும் ஏற்ற உயர்தரமிக்க PIV கணனிகள் இப்போது எம்மிடம்

- உத்தரவாதம்
- விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
- இலகு தவணைமுறை

அனைத்திற்கும் உங்கள் நம்பிக்கைக்குரிய தோழனாக

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kanthармadam, Jaffna. T.P 2222674



2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 06 - 1950



மறைவு 22 - 09 - 2001

கந்தசாமி கணேசலிங்கம் (பாஸ் ஐயா)

(றேகன் உணவக உரிமையாளர்)

எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள் பாசத்தை எம்மால் மறக்க முடியாது.

மனைவி, பிள்ளைகள்
றேகன் உணவகம்,
டச்சுறோட், உடுவில்

நிரந்தர முகவரி:
குளமங்கால், மல்லாகம். (சி-1575)



நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், ப்ரீதா நடித்த

தர்மா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

ULTRA FORCE- 2

(சி-1425)



ராஜா யாழ்ப்பாணம்.

அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த

அன்பு

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1426)


### தேரோடும் வீதியில் கண்ணில் நீரோடக் காத்திருந்தோம்




சீரோடும் சிறப்போடும் - ஈழம் மலர்ந்திடும்
சிந்தனை கொண்டிருந்தான்
தேரோட்டி கருத்தினை - கீதையாய்
கேட்டவன் பெயர் கொண்டான்
பேரோடும் புகழோடும் - வாழ்ந்திடும்
பெருமையைத்தான் துறந்தான்
யாரோடும் நோகாமல் - தன்னை
வருத்திடும் போர் செய்தான்
போரோடும் அகிம்சையாம் - வழியின்ன
பூமியில்தான் விதைத்தான்
மாவீரர்கள் வாழ்கின்ற - வாழ்க்கையைச்
சேர்ந்திட்ட காரணத்தால்
பாரிலே மீண்டும் - பிறப்பெடுத்து
வருவான் என்றெண்ணி
தேரோடும் வீதியில் - கண்ணில்
நீரோடக் காத்திருந்தோம்.

# பாகிஸ்தான் படைத் தளபதியை சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுப்பு!

## 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தகவல்



(புதுடெல்கி)

**ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க- பாகிஸ்தான் கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் முகமட் அஸீஸ்கானைச் சந்திக்க மறுத்துள்ளார். இதற்குக காரணம், இவரது இலங்கை விஜயம் தொடர்பாக இந்தியா வெளிப்படையாகவே தனது அதிருப்தியை வெளியிட்டதேயாகும்.**

**இவ்வாறு ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'இந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.**

பாகிஸ்தான் தளபதியின் விஜயம் தொடர்பாக -இலங்கை அரசு மிகவும் இரகசியத் தன்மையை பேணியமைக்கு, இந்தியா தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

அஸீஸ்கான் பாகிஸ்தான் இராணுவத்தில் சாதாரண ஒரு நபரல்ல. இவர் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ் முஷாரப்புக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையிலுள்ள அதிகாரியாவார்.

இதனால், இந்தியக் கடற்படைத் தளபதியான அட்மிரல் மாதவேந்திர சிங்கின் ஏற்கனவே திட்டமிட்ட இலங்கைக்கான பயணம் இரத்துச் செய்யப்பட்டது.

இலஙகை வெளியுறவு அமைச்சு, இவரின் வருகை தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து எதுவித ஆலோசனையையோ அல்லது கலந்தாலோசிக்கவோ இல்லை. அஸீஸ்கான் ஜனாதிபதி மாளிகைக்கு வந்தபோதும், அவர் ஜனாதிபதியையோ அல்லது அவரின் செயலாளரையோ சந்திக்க முடியாமல், மிகவும் அதிருப்தியடைந்து, அங்கிருந்து திரும்பிச் சென்றார்.

எவ்வாறாயினும் - பங்களாதேஷில் நடக்கவிருக்கும் சார்க் மாநாட்டுக்கான அழைப்பை ஜனாதிபதிக்கு வழங்கவந்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரை, கடந்த 15 ஆம் திகதி சந்திரிகா வரவேற்றுள்ளார்.

இந்துஸ்தான் ரைம்ஸின் தகவலின்படி - இராணுவ சாதனங்கள் உட்பட 20 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ சாதனங்களை, பாகிஸ்தானிலிருந்து கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது இந்தக் கொளவனவில் சிறியரக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களும் அடங்கும்.

2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் யாழ்.குடாநாட்டைத் தாக்கிய போது, பாகிஸ்தான் பல்குழல் பீரங்கிகளை வழங்கியமையும், இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் கடும் அதிருப்தி காரணமாகவே - ஜனாதிபதி பாகிஸ்தான் படையதிகாரியை சந்திக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



## உதைபந்தாட்டப் போட்டிகள்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள், இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானம், டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், திக்கம் விளையாட்டுக்கழக மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

16 வயதுப் பிரிவில் - தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து செம்பியன்பற்று வித்தியாலயமும், வல்வெட்டித்துறை கம்பர்மலை வித்தியாலயத்தை எதிர்த்து வல்வை சிதம்பராக் கல்லூரியும், வல்வெட்டித்துறை இ.த.க.வித்தியாலயத்தை எதிர்த்து ஆழியவளை வித்தியாலயமும, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இமையாணன் அ.த.க.பாடசாலையை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியும்-

18 வயதுப் பிரிவில் - வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியை எதிர்த்து செம்பியன்பற்று விததியாலயமும், ஆழியவளை வித்தியாலயத்தை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும், தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து கொற்றாவத்தை அ.த.க.வித்தியாலயமும் மோதவுள்ளன. (116)

# ஜஸ்வந்த் சின்ஹா அடுத்தமாதம் கொழும்புக்கு வருகின்றார்!



இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா- மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு அடுத்தமாதம் 14 ஆம் திகதி, கொழும்பு வரவிருக்கிறார். கொழும்பு வரும் இவர் இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுவார்.

கடந்தமாதம் இலங்கை வரவிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் - வாஜ்பாய் அரசுக்கு எதிராக, எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையையடுத்து, அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டமையும் தெரிந்ததே.

இலங்கை வரவிருக்கும் வெளியுறவு அமைச்சர்- சந்திரிகா பண்டாரநாயகக குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அனுமதி வழங்கப்பட்டிருந்தும் விவசாயம் செய்ய முடியாத நிலை

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் - அண்மையில் படையினரால், 1000 ஏக்கர் விவசாயநிலம் விவசாயத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலப்பரப்பில் விவசாயத்தினை மேற்கொள்ள வசதியாக, அங்கு புதைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை அகற்றுவதெனவும், இதற்கு 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினை ஈடுபடுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு உத்தியோகபூர்வமாக படையினரிடம் அனுமதி பெறும் பொருட்டு, அரச அதிபர்கோரியபோதும், இராணுவத்தினர் தாமே வெடிபொருட்களை அகற்ற வேண்டும் எனவும், வேறு நிறுவனங்கள் வெடிபொருட்களை அகற்ற, அனுமதிக்க மறுப்பு தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் - 1000 ஏக்கர் நிலப்பரப்பு அனுமதிக்கப்பட்ட போதிலும், இம்முறையும் விவசாயம் மேற்கொள்ள முடியுமா? என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. இதனால் அப்பகுதி விவசாயிகள் விசனமடைந்துள்ளனர். (25)

# நீதிமன்ற சிவில் வழக்குகள்; மூன்று வருடத்திற்குள் தீர்வு!

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும், சிவில் வழக்குகளை காலதாமதமின்றி, குறைந்தது மூன்று வருடங்களுக்குள் தீர்ப்பினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களில் சிவில் வழக்குகளை தாக்கல்செய்து, மக்கள் நீண்டகாலமாகக் காத்திருக்கின்றனர். வழக்குகளைத் தாக்கல் செய்தவர், உரிய தீர்வைப் பெறாமல் அவரது அடுத்த சந்ததிக்குச் செல்லும் அளவுக்கு வழக்கு நீடிக்கின்றது.

மக்கள் தொடர்புகளுக்கு அமைய நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் சிவில் வழக்குகளை, ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்குள், அவர்களுக்கான தீர்வினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சரத் என் சில்வா தெரிவித்தார்.

இந்த வழக்குகளை துரிதப்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதாகவும் -

முதற் கட்டமாக மேல்முறையீட்டு மன்றத்தில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தாய்லாந்துப் பொலிஸார் மீது விசாரணை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட, ஒன்பது தாய்லாந்துப் பொலிஸார் மீதும், விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக - தாய்லாந்துப் பிரதமர் தக்ஸின் சினவத்ரா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களுடன் நடந்த சந்திப்பொன்றிலேயே, தாய்லாந்துப் பிரதமர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மே மாதம் கைதுசெய்யப்பட்ட ஒன்பது பொலிஸார் மீதும் விசேட குழுவொன்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், அத்துடன் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் எனவும் பிரதமர் தெரிவித்தார்.







கரடியனாறு-தேனகம் விடுதியில் நேற்றுமுன்தினம் முஸ்லிம் பிரதிநிதிகளுடன், புலிகளின் கலந்துரையாடலின்போது - தளபதி ரமேஷ், முஸ்லிம் பிரதிநிதிகளை வரவேற்பதை முதற்படத்திலும், மட்டு.அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் முஸ்லிம் பிரதிநிதிகளை வரவேற்பதை இரண்டாவது படத்திலும், கலந்துரையாடலில் பங்குபற்றிய புலிகள் தரப்பு பிரதிநிதிகளை மூன்றாவது படத்திலும், காணலாம்.

# போராட்டத்தை இடைநிறுத்த வேண்டும் இல்லையேல் பதவி நீக்கப்படுவீர்கள்!

## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

சமயாசமய சுகாதார ஊழியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு, கடமைக்குத் திரும்பாவிட்டால், சமயாசமய ஊழியராகக் கடமையாற்றும் 30 ஆயிரம் பேர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்படுவர் என, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்கள், சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரி நடத்தி வரும் போராட்டத்தினால், வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலையில் நாட்டிலுள்ள அனைதது வைத்தியசாலைகளிலும், 30 ஆயிரம் பேர் சமயாசமய ஊழியராகக் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்கள் நாளை தமது கடமைக்குத் திரும்பாவிட்டால், அனைத்து ஊழியர்களும் கடமையிலிருந்து இடைநிறுத்தப்படுவர்.

இத்துடன், சுகாதார ஊழியர்களுக்கான பிரச்சனைகள் தொடர்பாக, திறைசேரிக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

திறைசேரியின் அறிக்கை கிடைத்ததும், திறைசேரி ஆராய்ந்து தமக்குப் பதிலை அனுப்பி வைத்ததும், சுகாதார ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச,ய)

# குடாநாட்டின் குடிநீர் பற்றாக்குறையை நீக்க நவக்கிரி கிணற்றிலிருந்து நீர் எடுக்கத்திட்டம்

## உலக வங்கி 40 கோடி ரூபா ஒதுக்கீடு

(ஆழியவளை)

யாழ். குடாநாட்டின் குடிநீர் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு, கிளிநொச்சி - இரணைமடுக்குளத்திலிருந்து சுத்திகரித்து, நீர் எடுப்பது என்ற திட்டம் - தற்பொழுது கைவிடப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலீடாகப் புத்தூர் நவக்கிரியிலுள்ள - வற்றாத கிணறான - நிலாவரையிலிருந்து இந்தக் குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு நீர் எடுப்பது என, தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி இத்திட்டத்திற்கென 40 கோடி ரூபாவைச் செலவிடவுள்ளது. நிதி கிடைத்ததும், இத்திட்டம் அமுல் செய்யப்படும் என யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் மழைநீர் வீணாவதைத் தடுக்க, ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின்படி, சகல பகுதிகளிலும் நிலத்தின்கீழ், பாரிய நீர் சேமிப்புத் தொட்டிகளை அமைத்து, வழிந்தோடும் நீரை அந்தத் தொட்டிகளில் சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவு வைத்தியசாலை வளாகத்தில் மழைநீர் சேகரிக்கும் நிலக்கீழ்த் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறு அமைப்பதனால் குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவேனும் தீர்க்கமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (122)

# மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை 16 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை, 16 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்த வைத்தியசாலை தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் - நிகொட் நிறுவனத்தினால், 160 இலட்சம் ரூபா செலவில் வெளிநோயாளர் விடுதி, ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, பிரசவ விடுதி போன்ற வசதிகளைகொண்ட வைத்தியசாலையாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வைத்தியசாலை அநேகமாக ஜனவரி மாதம் வேலைகள் முடிவுற்று, இயங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலை கடந்த கால இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# சாவகச்சேரி பிரதேச செயலகம்; புனரமைக்க உலகவங்கி உதவி!

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது, சேதமடைந்திருந்த சாவகச்சேரி பிரதேச செயலகம் - தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

உலகவங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ், 17 மில்லியன் ரூபா செலவில் இக் கட்டடம் அமைக்கும் பணி, கட்டடத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின்போது, இப்பிரதேச செயலகம் சேதமடைந்திருந்ததும், அன்று முதல் இன்றுவரை தனியார் கட்டடங்களிலேயே தொடர்ந்தும் செயலகம் இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

சகல வசதிகளும் கொண்டதாகவும், இரு மாடிகளைக் கொண்டதாகவும் இக்கட்டடம் அமையுமெனப் பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார். (24)

## பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக - உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும், சிறப்பு விருந்தினராக - இளைப்பாறிய மாவட்ட நீதிவான் விகடகவி மு.திருநாவுக்கரசுவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (42)

## இலவச கற்றல் வகுப்பு

மருதங்கேணி கோட்டத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு, ஜி.ரி.இசற் நிறுவனம் ஆசிரியர்கள் மூலம் துரித கற்றல் வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகின்றது.

மீளக்குடியமர்ந்த பின் இயங்கத் தொடங்கியுள்ள 10 பாடசாலைகளிலும் 21 ஆசிரியர்களைக்கொண்டு, இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகிறது.


# அரச காணிகளில் குடியேறுவோரை வெளியேற்ற அரச அதிபர் பணிப்பு

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச காணிகளில் அத்துமீறி குடியேறியுள்ளோரை, வெளியேற்றுவதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் - பிரதேச செயலர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்பொழுது பரந்தன் உமையாள்புரம் புகையிரத வீதி மற்றும் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளைக் கண்டாவளைப் பிரதேச செயலர் மேற்கொண்டு வருகிறார்.

மேற்படி அரசகாணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களை வெளியேற்ற, இறுதி அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (122)



அபுதாபி ஐக்கிய அரபு குடியரசினதும், வடமராட்சியினதும் ஆணழகன் பொன்.பாலனுக்கு விழாவில் பருத்தித்துறை கலைஞர் வட்டத்தினால் நடாத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் - பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## மாணவர் பேரவையில் திலீபன் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு, இன்று பிற்பகல் 3 மணிக்குச் சர்வதேச மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் , விரிவுரையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட அனைத்து சனசமூகநிலைய நிர்வாக உறுப்பினருக்கான விசேட கலந்துரையாடல்- நாளை பி.ப. 5 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், அனைத்து நிர்வாகிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# யாழில் திருவிவிலிய மறைக்கல்வி விழா!

(யாழ்ப்பாணம்)

திருவிவிலிய மறைக்கல்வி விழா இன்று தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்த விழாவை யாழ். மறைக்கல்வி நடுநிலையம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்த விழாவில் கண்காட்சி, பொம்மைக்காட்சி, மறைக்கல்வி சம்பந்தமான திரைப்படங்கள், கத்தோலிக்க திருமறைப் பாடநூல்களுக்கான விளக்கவுரைகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இந்த மறைக்கல்வி விழா நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் - இன்றும் நாளையும், இளவாலையில் - 24, 25 ஆம் திகதிகளிலும், பருத்தித்துறையில் - 26,27 ஆம் திகதிகளிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளினை, யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

திருவிவிலிய விழாவின் இறுதி இரு தினங்களும், கத்தோலிக்க திருமறை கற்பிக்கும் ஆசிரியர்கள் - க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான கருத்துரைகளை ஆற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (58)

## மல்லாகம் மாணவன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவனான த.பாகீஸ்வரன் - மாகாண மட்டத்தில் ஈட்டி எறிதலிலும், குண்டெறிதலிலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த மாணவன் மாகாண மட்டப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றதையடுத்து, தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

கொழும்பில் தேசிய மட்டத்திற்கான விளையாட்டுப் போட்டி 25, 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (68)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : கி.பகீரதன்
முகவரி : மாலுசந்தி, அல்வாய்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : பி.உஷாளினி
முகவரி : உச்சில் லேன், கரவெட்டி தெற்கு.

ஐந்தாவது அகவையில்



பெயர் : கி.டர்ஷிகா
முகவரி : மாலுசந்தி, அல்வாய்.

ஏழாவது அகவையில்



பெயர் : இ.வினோஜா
முகவரி : 42/5, அம்மன்றோட், கந்தர்மடம்.

ஏழாவது அகவையில்



பெயர் : இ.குலதீபன்
முகவரி : 42/5, அம்மன்றோட், கந்தர்மடம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

## இலக்கியச்சோலை

## தொடர் நாவல்

# சவாரி வீதி

## பகுதி-1

இரவி அருணாசலம்

**போ**யினபோயின பொழுதுகள். நகர்ந்தன நகர்ந்தன நாட்கள். வேளையோடேயே வேதனை வந்து வீழ்கின்றது. காலையொடேயே கடும் பகல் சூழ்கிறது. காலைக்கு குளிர் உண்டு. அது இல்லை. மாலைக்கு மகிழ்வுண்டு. அது இல்லை. எந்தப் பொழுதும் அழுது வடிகிறதாய் ஆகிறது. என்னவோ நரகத்தில் இடர்ப்பட நான் வாழ்கிறேன். குதூகலித்து, களிக்கும் பொழுதை நான் கொன்றுவிட்டேன். சிரிப்பின் முகத்தை நான் சிதைத்துவிட்டேன். சாவரைக்கும் முகம் செத்துத்தான் போகுமா? அப்படித்தான் ஆகும். ஆயினும் சாவுக்கப்பாலும் நான் வாழ விளைகின்றேன். சா வந்து என்னால் எழுதக்கூடிய தமிழ்ச் சரிதத்தை சாக் காட்டக்கூடாது என்று நிமிர்கிறேன். எழுதுகிறேன்.

எழுதுவதற்கு எவ்வளவோ உண்டு. எழுதப்பட முடியும் என்ற நம்பிக்கையும் உண்டு. சொல்வதற்கு ஓராயிரம் கதைகள் உண்டு. சொல்லி முடியுமோ என்னும் சந்தேகமுண்டு. சொல்ல முடிந்ததைச் சொல்லிமுடிப்பேன். 1958 கலம்பகக் கதையின் அடுத்த கதையில் வந்துநிற்கின்றேன். நான் இப்போது நான்காவது கதைசொல்வேன்.

அதுதான் அப்பா இனி இயலாது என்று நம்பினார். அப்பாவின் சைக்கிளோட்டத்தில் இப்போது சற்றே வேகம் குறைகிறது. அதற்காக சோளகம் உக்கிரமாக வீசுகிறது என்றில்லை. இன்னும் சொன்னால் தணிகிற காலத்தில் சோளகம் வந்துநிற்கிறது. அந்தப் பனங்கூடல் வழியில் சைக்கிள் இப்போது அடிக்கடி சிலீக் பண்ணுகிறது. எஞ்சியிருந்த எல்லா நம்பிக்கைகளும் சோளகக் காற்றோடு அள்ளுண்டு போய்விட்டன. ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்ரருக்கு பாதுகாப்பு இல்லாதபோது, சாதாரண தமிழனுக்கு அந்த தேசத்தில் என்ன பாதுகாப்பு இருக்கும்? கடமையை சரிவரச் செய்த காரணத்துக்காக, கத்தியால் குத்தப்படுகிறார். நூற்றுக்கணக்கில் உயிர்களைக் காப்பாற்றியதற்காக, படுகொலை செய்யப்படுகிறார். தமிழனாகப் பிறந்த ஒன்று என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அப்பா அதை நன்குணர்ந்தார். இனி தாய்தேசம் விட்டு அந்நியதேசம் போவதாக இல்லை. வேலையை இங்கு மாற்றித்தரப்போவதில்லை. வேலையை விடவேணும். விடலாம். வேறு என்ன செய்வது?

செய்வதற்கு வேலைகள் இருந்தன. சும்மா சோம்பிக் கிடப்பதிலும் சைக்கிளில் உழல்வதுமாக நாட்கள் நகரக் கூடாது. நாட்களைக் நம் கையில் எடுப்போம். நகரும் ஒவ்வொரு கணத்துக்கும் அர்த்தம் சேர்ப்போம். பொருள் தேடப் பொழுதைப் புதுக்குவோம். மூத்தம்மானிடம் அப்பா போனார்.

நெடுங்கேணித்தோட்டம் மூத்தம்மானுடையது. கோவணம் என்று செம்பாட்டுத் துண்டொன்று கட்டி தோட்டத்தில் உலவினார். பொயிலை செழிக்கும் தறை அவரது. பத்தாயிரம் கண்டுத் தோட்டம். தோட்டத்தில் உழைத்ததை தோட்டத்தில் போட்டார். ஆயிரம் கண்டு இரண்டாயிரமானது. இரண்டாயிரம் நாலாயிரமானது. நாலாயிரம் பத்தாயிரமானது. பத்தாயிரம் கண்டுக்குக் கூடவே சின்னமானும் இருந்தார். கடையம்மானும் இருந்தார்.

வெள்ளி காலிக்க இலகடியிலிருந்து மடத்தடி வந்து காத்தவராயனைக் கும்பிட்டு, சவாரி வீதியில் ஏறி தஞ்சிட்டி முந்தல் தாண்டி இலந்தைப் பற்றைக்குள்ளால் விழுந்தால், நெடுங்கேணித்தோட்டம் நீளவிரிந்து செம்பாட்டு மண்ணுடன் கிடந்தது. நீளவிரிந்ததில் ஒரு கரை சவாரி வீதியின் பெரும பகுதியை பிடித்தது.

விடிய முன்னம் இருட்டுக்குள் செம்பாட்டு மண் தெரியாது. கறுக்கித் திட்டாய் தெரியும். மூத்தம்மானின் காலில் பாம்பு தடக்குப்படலாம் என்பது வேறு. அவரது நடை அதிர்வில் பாம்புகள் ஓடி ஒளிந்துபோகும். அவருடன் கூடவே இன்னொன்றும் அடிக்கடி நடந்து வந்தது. இரண்டு காலடிச் சத்தம் கேட்காது. ஒரு மூச்சு விடும் சத்தம் கேட்காது. ஆனால் இன்னொன்று கூடவே வரும் சத்தம் கேட்டது.

மிகச் சமீபத்தில் ஒரு செத்தவீடு நடந்தால், ஒன்று கூடவே நடக்கும். கதைபேசும். சிரிக்கும் "சுத்து"க்குப் பொயிலை கேட்கும். மூத்தம்மான் அதற்கு பயந்ததில்லை. முதுகில் ஒட்டியிருந்த தூசியை தட்டிவிடுவது போல் பயத்தைத் தூக்கித் தூரப் போட்டுவிடுவார். இதுக்குப் பயந்தால் தோட்டம் துரவைச் செய்யஏலுமே? சிவபாக்கியமக்கா செத்து சுடலையில் தாட்ட அடுத்தநாள் விடிய மூத்தம்மானுடன் நடந்துவந்த அது, மூத்தமானின் கையைப் பிடித்து இழுத்தது. கைகள் பொதுவாகக் குளிர்பவை. இது மிகச்சுட்டது. சிவபாக்கியமக்கா மூத்தம்மானில் ஆசைப்பட்ட காலத்தில் இணுவிலில் கலியாணம் முடிச்ச ஒரு பொம்பிளையை தூக்கிக் கொண்டு வந்துவிட்டார்.

ஒரு நாள் யாவரும்கேட்டு ஆச்சரியப்படும்படியாய், ஒன்று நடந்தது. இறைப்பு என்றால் கடையம்மான் துலா மிதிக்க சின்னம்மான் தண்ணி கோல மூத்தம்மான் தண்ணி கட்டுவார். வெளிச்சம்வர தண்ணிக்கட்டு முடியும். இறைப்பிலன்று தஞ்சிட்டி முந்தலுக்கு முதலில் வருபவர் கூ..... என்று கூக்காட்டுவார். மற்றவர்கள் எங்கு நிற்கின்றார்களோ அங்கிருந்து கூக்காட்டுவார்கள். ஒரு கூக்காட்டுச் சத்தம் கேக்காட்டில், தஞ்சிட்டி முந்தலில் நின்று பார்த்து வராதவர் யார் என்று கண்டு அவர் வீடுபோய் அவரை எழுப்பிக் கூட்டிக் கொண்டு வருவார்கள். ஒரு இறைப்பு நாள் அன்று தஞ்சிட்டி முந்தலில் மூன்று கூக்காட்டல்களும் கேட்டன. சரிதான் என்று இறைப்புக்குப் போனார்கள்.

துலா மிக வேகமாக மிதிபட்டது. 'கந்தையா கொஞ்சம் மெல்லமா உழக்கணை' என்று சின்னம்மான் சொன்னார். "சரி" என்றொரு சொல் கேட்டது. வாய்க்காலுடைத்து, வரம்புடைத்து, தண்ணி தோட்டம் மேவிப் பாய்ந்தது. மூத்தம்மான் "இஞ்சை எல்லாம் உடைக்குதடா. கொஞ்சம் மெதுவாய் செயயுங்கோடா" என்றார், அப்போதும் சரி என்றொரு சொல் சிரிப்புச் சத்தத்துடன் துலாவிலிருந்து வந்தது. கந்தையாவுக்கு இண்டைக்கு ஏதோ நடந்திட்டுது என்று சின்னம்மான் நினைத்தார்.

விடிந்து வெளிச்சம் வரப்பார்த்தால் துலாவில் ஒருத்தரையும் காணம். சின்னம்மான் ஏங்கிப்போனார். இருட்டுக்குள் துலாவில் கறுத்த உருவம் தெரிந்ததுதான். இப்போது ஒன்றும் இல்லை. 'அண்ணை இஞ்சை கந்தையனைக் காணேல்லை என்றார் சின்னம்மான். "அப்ப இவ்வளவு நேரமும் ஆர் துலா மிதிச்சது?" கேட்டார் மூத்தம்மான்



"அதுதான் தெரியேல்லை"

கடையம்மான் வீட்டை போய்ப்பார்த்தால் அவர் காய்ச்சலில் குடங்கிப் போய்க்கிடக்கிறார். பாம்புகளும் பேய்களும் தாராளமாக உலாவின தோட்டக்காணி அது. பேய்கள் மிகச் சாதாரணமாக மக்களுடன் உண்டு, உடுத்து, உறங்கி சீவித்த காலம் அது!

'அருணாசலம் உன்னால ஏலும். நீ தொடங்கு. நான் உனக்கு காணி தாறன்' என்றார். மூத்தம்மான் சின்னம்மான் நான் பின்னால நிண்டு எல்லாம் செய்யிறன். நீ கையை வை. எல்லாம் செழிக்கும்' என்றார். "வாத்திவேலை நல்ல உத்தியோகம்தான்டா. இவ்வளவு கலம்பகம் நடந்த பிறகும் அங்கை போய்ப்படிப்பிக்க ஏலுமே?" அந்த மோட்டு நாய்களோடை வேலை செய்யாதை. இஞ்சை தோட்டம் துரவைக்குச் செய்யலாம்தானே? என்றார் வாத்தியம்மான். இன்னும் இப்பிடி அப்பாவுக்கு சொல்ல கடையம்மான், இராசையம்மான் எண்டு இருந்திச்சினம். ஆனால் சொல்ல அவர்கள் அப்போ அங்கிருக்கவில்லை.

அப்பாவுக்கு இந்த உற்சாகம் போதுமாய் இருந்தது. மண்ணைக் கிண்ட, கிண்டியதில் விதை ஊன்ற ஊன்றியதில், ஒரு நீர் வார்க்க, வார்த்து அது வளர்ந்து, வளந்தர அப்பாவுக்கு இன்னொரு மகன்பெற்ற மகிழ்வு. அப்பா கற்பனையில் சுகம் கண்டார். சற்சதுரமாய் இருந்தது காணி. ஆயிரம் கண்டுத் தோட்டம். சரிநடுவில் ஒற்றைப்பனை. மண்ணைப் பார்த்தார். பொன்னாய் விளையும் அது என்று, அந்தச் செம்பாட்டு மண் சொல்லிற்று. தோட்டக்கிணற்றில் தண்ணீர் அள்ளிக்குடித்தார். வராதன, வருமாப்போல் வளம் அள்ளித்தருவேன் என்றது அந்நீர். காற்றை முகர்ந்தார். முளையைத் தடவி இன்னும் முகிழ்க்க வைப்பேன் என்றது காற்று. மேலும் எவற்றிடமும் கேட்க ஒன்றுமில்லை.

ஒருத்தி மாத்திரம் இருந்தாள். அவள் அப்பாவின் அம்மாளோ 'அருள் செய்வேன்' என்றாள். நீ இடர்ப்படாது வாழ வழிசெய்வேன் என்றாள். சிறுபுன்னகை தந்தாளேயொழிய முழுச்சிரிப்பு தந்ததில்லை. புன்னகை ஒன்றே போதும்.

சின்னப்பு வாத்தியாரிடம் சாதகக்கட்டை கொண்டுபோகச் சொன்னார் அம்மா. அப்பாவினதும், அம்மாவினதும் பனை ஓலை ஏட்டுச் சுவடிச் சாதகத்தையும், அக்காவின்சாதகப் புத்தகத்தையும் கொண்டுபோனார். சாதகத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "வைச்சிட்டுப் போ" என்றார் சின்னப்பு வாத்தியார். அப்பா வைத்து விட்டு கொஞ்ச நேரம் நின்றர். "ஒரு கிழமையால இஞ்சாலைப் பக்கம் வரேக்கை எட்டிபாரன்" என்றார். பிறகு சின்னப்பு வாத்தியார் கண்மூடிக் கொஞ்சநேரத்தில், "அம்மாளே" என்று பெருமூச்சு விட்டார். அப்பாவின் மனசில் "அம்மாளே" என்ற சொல் எதிரொலித்தது. "சின்னப்பு வாத்தியார் ஏன் அப்படிச் சொன்னார்?

அம்மாள் கோயிலுக்கும், கிராயிட்டி வைரவர்கோயிலுக்கும் இடைப்பட்டது சவாரி வீதி. சாமப்போதுகளில் அந்தவீதியில் அம்மாளினதும், வைரவரினதும் உலாத்து இருக்கும். வெள்ளிப்பூண் போட்ட கைத்தடி ஒன்றினால் றோட்டை தட்டித்தட்டி வைரவரின் நடை இருக்கும். அம்மாளின் அடையாளம் காற்சங்கிலியும், வெள்ளைச்சீலையும்தான்.

கந்தியாத்தை இதை கண்டிருக்கிறாள். வயித்தைக் கலக்குதெண்டு, சுத்துப்பத்திக்கொண்டு, வெளிக்குப் போய் பனையைப் பிடித்து குந்தியிருந்தபோது, கண்டிருக்கிறாள். கந்தியாத்தை, பயத்தில் பனையை இறுக்கிப் பிடித்தாள். பிறகு, பிறகு நாட்களில் எல்லாம் காற்சங்கிலி சத்தமும். வெள்ளிப்பூணினால் றோட்டைத் தட்டுகிற சத்தமும் ஒன்றாகக் கேட்கத்தொடங்கியது, கந்தியாத்தைக்கு.

பிறகொரு காலத்தில் நாங்கள் கட்டிய வீட்டிற்கு நேர் முன்னே தான் அம்மாளும், வைரவரும் சந்தித்துக்கொள்வார்கள் என்று கந்தியாத்தை சொன்னா. அதே சவாரி வீதியில் அவர்கள் சந்தித்துக் கொள்கின்ற அதே இடத்தில், ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது பிறகு!

சவாரி வீதியில் சனிக்கிழமை பின்னேரங்களில், சவாரிப் போட்டி நடக்கும். இதற்காக இராசையம்மான் வன்னிசென்று மாடுகள் வாங்குவார். இதுதான் அதிதிறம் என்று சொல்லும் படியாக குளமங்கால் சுப்பைய்யரைக் கொண்டு சவாரி வண்டில்செய்விப்பார். காத்துப் போலவும் இருக்கவேணும். வயிரமாகவும் இருக்கவேணும். அம்பெனப் பாயும் சவாரி மாடுகளுக்கு ஆய்க்கினைகளும் குடுக்கக்கூடாது. புத்துக்குள் கைவிட்டு நாகத்தையோ, புடையனையோ கழுத்தாங்குப் பகுதியில் பிடித்து ஒரு உலுப்பு உலுப்பி நிலத்தில் போடுவார். வாலால் துடித்த பாம்பு செத்து நிலத்தில் பறியக்கிடக்கும். அப்படிச் சாகசம் செய்யத் தெரிந்த இராசையம்மானுக்கு சவாரி ஒரு விசயமல்ல.

சவாரி மாட்டின் தீனியிலிருந்து, சவாரி வண்டிலின் அச்சுவரை அதிகவனமாக இருந்தார். வெல்வது ஒன்றைத்தவிர அவர் வேறொன்றையும் அறிய விரும்பவில்லை.

சொந்தக்காரர் வீடுகளில், கலியாணம் அல்லது அந்திரட்டி என்றால், பந்திச்சாப்பாட்டுக்கு கப்பல் வாழைப்பழம் இராசையம்மானுக்குரியது. முதலாம் பந்தியுடன் முடிவதல்ல. இரண்டாம் மூன்றாம பந்திகளிலும் தொடர்ந்து கடைசிப்பந்திவரையும் கப்பல் வாழைப்பழம் இருந்தது. அம்பாரம் சனம் வந்த, வேல்சாமி மாமாவின் அந்திரட்டிக்கு அவ்வளவு சனத்துக்கும், கொழுத்த கப்பல் பழம் கொடுத்தார். அந்திரட்டி நாளன்று வெடித்து பழுப்பதற்குரிய கப்பல் குலைகளை தேடி, எத்தனையோ தோட்டங்கள் ஏறியிறங்கினார். மகாஜனாவின் முதல் இஞ்சினியர் வேல்சாமி மாமா, அவரின் மகன் சின்னக் குழந்தையாய் இருந்த சங்கரன். 'அப்பா நித்திரையாக் கிடக்கிறார்' என்று சொன்னாற் போல, வேல்சாமி மாமாவின் சாவை யாரும் நினைக்கவில்லை. பேரிழபபு என்றுதான் நினைத்தார்கள். மகாகவிகூட அவரின் இழப்பை உண்ணி ஒரு கவிதை பாடினார். அவரது இழவு வீட்டுக்கு துக்கித்து வருவோருக்கு கௌரவம் செய்ய கப்பல் வாழைப்பழம் கொடுத்தது சரிதான்.

இராசையம்மான் சவாரி ஓடுகின்றார் என்றால் அதைப் பற்றி மேலும் ஒரு வார்த்தை சொல்வது சரியல்ல. வன்னிக்குப் போவார். சவாரிக்கு தோதாய் மாடுகளைத்தேடி ஊர் ஊராய் அலைவார். கழுகன், நரையன் என்று காளை மாடுகளைக் காண்பார். வன்னியிலிருந்து நடைதான். ஐந்துசோடி கால்கள் அளவெட்டி நோக்கி நடந்தன. இடையில் யானைக் காடுகள் இருந்தன. பிளிறும் ஓசை கேட்டது. யாருக்கும், எவருக்கும் அஞ்சியவரல்ல இராசையம்மான்.

இந்தாவருது அந்தா வருது என்று, இங்கு ஊர்பரபரத்தது. கரிப்பட்டு மூலைக்கை சவாரிக்கு பிடிச்சிருக்கிறானாம். இந்த முறை இராசையனுக்குதான், சுன்னாகம் ஐயக்கோனாலை எங்கன்ரை இராசையனை வெல்லேலுமே? என்று ஊர் குசுகுசுத்தது. ஐயக்கோனின் சவாரி ஓடும். சுருளி அளவெட்டிப் பக்கம் உலாத்துப் போட்டு இராசையம்மானின் சவாரிகளைக் காண முயல்வர். சுருளியைக் கண்டாலே ஊர் அசமந்தப் போக்கிலிருந்து நிமிரும்.

வரும் காளைகள் காண படலைகள் திறக்கப்பட்டன. திறக்கப்பட்ட படலைகளால் பார்த்தோர் இரண்டு காளைகளைக் கண்டார்கள் அல்லர். மூன்று காளைகளைக் கண்டனர். இரண்டு சோடிக் கால்களுடன், இரண்டு காளைகள் இருந்தபோது ஒரு சோடிக்காலுடன் மற்றக்காளை இருந்தது. ஆனால் அவர் கலியாணம் கட்டவில்லை வாழ்வை அதுபோன்ற பராக்கிரமச் செயல்களுக்கும் ஒப்புக்கொடுத்து விட்டு வாழ்ந்தார். அதாலை தான் தினகரன் நடத்தின சவாரிப்போட்டியில் - தங்கப்பதக்கம் கிடைச்சபோதும், அந்தப்பதக்கத்தை வயித்தி குடும்பத்துக்குக் குடுத்தார். குடுத்தபோது வயித்தி அஞ்சு வருசம் என்று தீர்பட்டு சிறைக்குள்ள கிடந்தார்.

அந்த முறை தினகரன் நடத்தின போட்டியிலை வயித்தியால், இராசையம்மானுக்காக சவாரி ஓட முடியவில்லை. வயித்தியைத்தான் இராசையம்மான் எல்லாத்துக்கும் நம்பினார். வயித்திதான் இராசையம்மானுக்கு வெற்றிகளை வாங்கிக் குவித்தார். இராசையம்மான் சவாரி நின்ற இடத்தில், சுன்னாகம் ஐயக்கோன் வந்தும் வெற்றியைக் கண்டதில்லை. ஐயக்கோனாலையே வெல்லமுடியாதபோது, சைலர் சின்னத்தம்பியாலை எப்படி வெல்ல முடியும்? இவ்வளவுக்கும் வயித்தி சைலருக்குக் கிட்டின சொந்தம். இதுதான் சைலருக்கு வயித்தியிலை கடும் வன்மம், "இந்தச் சேங்கன் அவங்கன்ரை கோடி வழிய கிடந்து, அடியை நக்கிப்போட்டு" என்று சைலர் தூசணம் எல்லாம் கலந்து புளுததபாட்டா ஏசினார். வயித்திக்கு இதொன்றும் பட்டதில்லை.

(தொடரும்)

# நூல் அகம்

## ஓவிய அறிநெறி

உலக ஓவியக் கலை வரலாற்றிலே பிரதிமைக் கலைபற்றி ஆழ்ந்த புலமையும், நீண்ட அறிவும் அவை தொடர்பான நுணுககங்களையும் நன்குணர்ந்த ஓவியர் - க.இராசரத்தினம் என்பவரே இந்த நூலை ஆக்கியுள்ளார். இந்தியாவில் பிரதிமைக கல்வியைப் பயின்ற இவர், சித்திர ஆசிரியராகவும், வின்சர் ஓவியக்கழகத்தின் விரிவுரையாளராகவும், சித்திரப் பாட வித்தியாதிகாரியாகவும் பணியாற்றி, தற்போது யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.




இந்தநூல் பாறைக்கலையில் இருந்து, பல்கலைக் கழகம்வரை எனும் பொருள்பட, உயர் கல்வி மாணவர்களிற்காகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதனை தனது குருவும் மூத்த ஓவியருமான எஸ்.ஆர். கனகசபை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்கிறார் நூலாசிரியர். இந்நூலில் அணிந்துரையினை மிக ஆழமாகவும் தெளிவாகவும் கவிஞர் இ.முருகையன் வழங்கியுள்ளமை, நூலின் சிறப்பை மேலும் ஒருபடி உயர்த்துகிறது.

இன் நூலை பத்து அத்தியாயங்களாகப் பிரித்துள்ளதுடன், ஒவ்வொரு அத்தியாயத்திலும் விளக்கப் படங்களைச் சான்றாக வழங்கியுள்ளார். புகைப்படக் கருவிகள். இதர நவீன இலத்திரனியல் சாதனங்களின் ஆதிக்கமுள்ள இவ்வேளையில் ஒருவரை அல்லது சிலரை நேரிலே பார்த்து, வரைந்து, புனைந்து பெறப்படும் படமாகப் பிரதிமை காணப்படுகிறது. பத்து வகையான புதுப்புது அணுகுமுறையில், தனது தொகுப்பை நிறைவு செய்த ஆசிரியர், பிரதிமைக் கலையின் இன்றைய நிலைமையும், அதன் வருங் காலத்தையும் முன்னிட்டு, ஆழமாகச் சித்தரித்து, ஓவிய உலகிற்குப் புதிய ஒரு புத்தகத்தைத் தந்துள்ளார்.

பிரதிமைக்கலையின் பூர்வீகத்தையும், அது கடந்து வந்த பாதையினையும், அதில் ஏற்பட்ட பல இடர்களையும் பிரதிமைக்கலையின் முன்னோடிகளான, பேராசான்களாக விளங்கிய பல ஓவியர்களது சாதனைகளையும், அவர்களது நுணுக்கங்களையும் மிகநிதானமாகத் தந்துள்ளார். தோற்றுவாய் என முதலாம் அத்தியாயத்தில் தொடங்கி, ஓவியமாயை எனப் பத்தாம் அத்தியாயத்துடன் பூர்த்தியாகும் இப்படைப்பு, ஆபிரிக்க பாறை ஓவியங்களின் விளக்கப்படங்களுடன் ஐரோபபிய பாறைஓவியங்களின் விளக்கப்படங்களும், அமைந்துள்ளன. வர்ண ஆளுமை, ஓவிய விமர்சனம் என்பவற்றுடன் இந்திய, எகிப்திய பாறை ஓவியங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரண்டாம் அத்தியாயம் "பழம் பெரும் பாறைக் கலை" என்பது பற்றியதாகும். இதில் முதன் முதலாக இந்தியாவின் பிம் பெத்தகா, கைமூர் ஆகிய மலைகளே கலையின் தொடக்கமாகவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்காம் அத்தியாயத்தில் - இரேகை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதில் ஒரு மெய்யுருவத்தைக் கொடுப்பதற்கு ஏற்ற வழிமுறை இரேகையே எனவும், இரேகையும் தரமுயர, ஓவியனும் தரமுயர்வான் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவரை - ஓவியன் எனக் கூறுவதாய் இருந்தால், அவரது இரேகைகள் பேசும் மொழியின் ஆற்றலாலும், அவற்றின் பெறுமானத்தாலும் அத்துறையில்தான் ஒரு நிபுணன் எனப் பிறரை உணரவைத்தல் வேண்டும் எனக் கூறுவது சிந்தனைக்குரியதாகிறது.

ஐந்தாம் அத்தியாயத்தில் - கண்ணின் அவதானம் அவசியம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதில் சிறந்த கலைஞனின் கற்பனைகள் மூன்று எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆறாவது அத்தியாயத்தை - ஓவியமாயை எனும் பொருட்பட அமைத்துள்ளார். ஓவியமாயையானது ஆரம்பத்திலேயே தோன்றியது எனவும், வர்ண ஒளி ஒரு சந்தர்ப்பவாதி எனவும் குறிப்பிடும் நூலாசிரியர், (பிரதிமை படைக்கும்போது அமர்பவனுக்கும், ஆக்குபவனுக்கும் இடையில்உள்ள தூரம், அமரும் தன்மைகளையும், அதற்கான விளக்கப்படங்களையும், விபரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

தொடந்து வரும் அத்தியாயங்களில் புரட்சிகள், விமர்சனம், தாராளவியற் க்ல்வி, ஓவியம் என நிறைவு செய்கிறார். இதில் ஆக்க இலக்கியமும், ஆக்க கலைகளும், கலை பயிற்றலில் பரத கண்டமும் ஐரோப்பாவும், பல்கலைக்கழகங்களும் ஓவியம் பயிலும் கலைக்கழகங்கள் தொடர்பாகவும், இவைகள் ஓவியம் தொடர்பாக எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாகவும், பல வித்தியாசமான அணுகுமுறையில் தனது சீரிய புலமையின் வெளிப்பாடாக இவ் ஆக்கத்தை எடுத்தாண்டுள்ளார் ஓவியர். ஓரிடத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தின் ஓவியப்பணியையும் மிகச் சிறப்பாக எடுத்தியம்பியுள்ளார்.

ஓவிய உலகில் தமிழ் புத்தகங்கள் அற்ற இன்றைய நிலையில், ஓவிய அறிநெறி என்கின்ற இவரின் இரண்டாவது படைப்பு - ஓவிய ஆசிரியர்கள், மாணவர்களிற்குக் கிடைத்த அரும் பெரும் கொடை என்றே கூறவேண்டும்.

**காவலூர் விஜேந்திரன்**

# நேர்த்திகளின் பரிமாணம்



பாதை திறப்பு பயணம் என இர
நாடே எழுந்தது
நகர்வலங்கள் செல்கிறது.
வாசலிலே விளக்கேற்றி வைக்காத போதுமெங்கள்
ஊர்நிறைந்தது இன்று உல்லாசப் பயணிகளால்!
சூரியனார் கரையும்,
சுகமுறையும் மாலைகளில்
கோவிலடியில் குவிகின்ற தென்பகுதிச்
சோதரர்கள் என்ன சுதந்திரமாய் அன்பூற்றி
புன்னகையை நட்டெம்மைப்
பீடித்துப் போகின்றார்.
மண்ணின் குளுமையினை வனப்பிற் சுமந்தபடி
கன்னியர்கள்,
நாகரிக காளையர்கள்,
விழுமியத்தைப்
பாரம் பரியத்தைப் பறக்கவிடா ஆடவர்கள்,
'கம்பாயப்' பெண்கள்,
கண் கவருஞ் சிறுமியர்கள்,
மின்னும் 'பிளாஸ்' கள், வீடியோ, புதுவான்கள்,
என்றுகோவில் வீதியிலே எழிலுறவு
புதிய... பாலம்
அன்பைக் குழைத்து அமைக்கின்றார்.
காவியுடை
மதகுருமார் கோவிலுக்கு மரியாதை செலுத்தையிலே...
'கதிர்காம தெய்யோ' என்று தலைவணங்கி
அச்சமின்றி ஆறுதலாய்
ஆரார்க்கோ நேர்த்திவைத்து
கற்பூரங் கொழுத்தியேற்றித் தேங்காய் உடைக்கின்றார்.

எல்லா மனிதர்களும் இறைவனின்முன் சரிசமந்தான்
எல்லா இனங்களுமே
இந்தநாட்டில் சரிசமனா?
நான் நின்று புன்னகைத்தேன் நட்போடு.
யோசித்தேன்...
யாருக்காய் இவர்கள் நேர்கிறார்கள்?
தங்களது
போர்க்களத்துப் பிள்ளைகட்கா? போருக்கா?
தம் இனத்தின் வீறுக்கா?
வந்த விடிவுக்கா? நிரந்தரமாய்த் தீர்வுக்கா?
எங்களது சேய்களுக்கா?
நானறியேன்.

'யாருக்காய் அவர்களது நேர்த்தி'
என்பதிற்தா னெம்
தீர்வுதங்கி உள்ள தென்பேன்.
'யார்வர்க்கும்', நான் நேர்ந்தேன்.

# கவிதைச் சோலை

## சந்தேகங்கள் உருவாக்கப்படுகின்றன



உனக்கு
நன்றாகவே தெரியும்
என்னைப்பற்றி.
எனினும்
உனது இதயத்தின்
பெரும்பகுதியில்
என்னைப்பற்றிய சந்தேகங்களாகவே
துடித்துக் கொண்டிருக்கின்றன.
இதனாலேயே
சண்டைகள்...
சச்சரவுகள்...
குழப்பங்கள்... என
நாளும் பொழுதும்
புலர்ந்து கொண்டேயிருக்கின்றன.
எனக்குத் தெரியவில்லை
உன்னை மாற்ற.
நான் மாற முயற்சித்தேன்
இறுதியில்
உன்னைப் போலவே
மாறிவிட்டேன்.
இப்பொழுது...
எனது இதயத்திலும்
உன்னைப்பற்றிய
சந்தேகங்களாக...

**அ.சூரியன்**

# கிழக்கும் மேற்கும்

## ஔவையார் - சோக்கிரட்டீஸ்

இவரின் இல்லாள்
இவரை எந்நாளும்
சோம்பல் மிக்கதோர்
கணவராகவே
கருதி வந்தாள்।
வழமைபோல் ஓர் நாள்
ஞானியின் மேலே
வசைமொழி தொடுத்தாள்।
ஞானியோ அது பற்றி
அலட்டிக் கொள்ளாது
அசட்டையாயிருந்தார்।

இவரது மௌனம்
அவளின் சினத்தை
அதிகரித்திடவே
பாத்திரம் நிறைந்த
அழுக்கு நீரினை
எடுத்து வந்தவள்
ஞானிமேல் கொட்டினாள்।
ஆயினும் – அவரோ
அதற்கும் எதுவிதச்
செயற்பாடுமின்றியே
மௌனமாயிருந்தார்।

**முருகு**



இந் நிகழ்வினை யெல்லாம்
கண்ணுற்றவோர் நண்பர்
"இவையெல்லாம் என்னவோ?'' –
என்று வினாவினார்।
"இதுவரை இங்கே
இடிஇடித்திப் போது
மழை பொழிந்துள்ளது'' –
என விடை தந்தார் –
அப்பெரும் ஞானி।
அரசின் குறைகளை
அரசுக்கு அஞ்சாது
அவ்வப்போதே
சுட்டிக்காட்டி
மக்களுக்குக் குணர்ந்தினார்।
மக்களோடு மக்களாக
ஏற்றத்தாழ்வு எதுவும் நோக்காது
பேதம் எதுவும் நோக்காது
உறவு கொண்டிருந்தார்.
மக்களுடன் நெருக்கமாக।
மக்களின் மனநிலை
அறிந்து கொண்டவர்
குறைகளைக் கண்டதும்
அறிவுரை கூறிக்
குறைகளைக் களைந்தார்।
"எச்செயல் செய்தாலும்
செய்திடும் செயல்
சரியா? தவறா? எனச்
சந்தித்தல் வேண்டும்।
செய்யும் செயலால்
வாழ்வு கிடைக்குமா?
தாழ்வுதான் வருமா? எனச்
சிந்திக்க வேண்டாம்।'' –
என்றறிவுரையினை
தம்பின்னே கூடும்
மக்களுக்களித்தார்।

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*ஐந்தில் வளையாதது*
*ஐம்பதில் வளையுமா?*

- தமிழ்ப்பழமொழி

## நமது நோக்கு

# அரசியல் சூறாவளியின் மையம் திருகோணமலை!

திருகோணமலையின், சர்ச்சைக்குரியதாகிவிட்ட பாதுகாப்பு விவகாரத்தை மேலும் மேலும் விகாரமான விவகாரமாக்கி அதன்மூலம் குறுகிய அரசியல் இலாபத்தை ஈட்டவும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடியை உருவாக்கி, அவருக்கெதிராக பேரினவாதச் சிந்தனையாளர்களைத் தூண்டி மக்கள் மத்தியில் அரசின் மீதான அதிருப்தியுணர்வை வளர்க்கவுமான நடவடிக்கைகளில் எதிர்க்கட்சியினர் தீவிர முனைப்புடன் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

இப்படியானதோர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான காலதருணத்திற்காக, எதிர்க்கட்சியினர் தாம் பதவியிறக்கப்பட்ட காலம் முதலே காத்திருந்தனர்.

அந்தக்காலம் இப்போதுதான் கனிந்து வந்துள்ளது போல் தெரிகிறது. திருகோணமலைப் பிரச்சினையை ஓர் உணர்ச்சிபூர்வமான விடயமாகச் சித்தரித்து அதனை தென்பகுதி மக்களிடையே அரசுக்கெதிரான உணர்வுக் கொதிப்பை உருவாக்க எதிர்க்கட்சியினர் ஒரு விஷமத்தனமான விஷவியூகமொன்றை வகுக்கத் தொடங்கிவிட்டனர் என்பது தெளிவு.

சிறிலங்காவில் உருவாகக்கூடும் என்று கருதப்படும் அரசியல் புயலானது, திருகோணமலையில் மையம் கொள்ள ஆரம்பித்துள்ளது.

இந்தப் புயல்மையத்தின் மூலம் - நாம் ஏற்கனவே இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்ததைப் போன்று, கதிர்காமர் கடந்த வாரங்களின்போது திருமலைத்துறைமுகம் மற்றும் கடற்படைத்தளத்திற்கு - விடுதலைப் புலிகளால் பெரும் ஆபத்து ஏற்படப்போவதாகவும், திருமலை முழுவதுமே- போர் தொடங்கினால் புலிகளின் வசமாகிவிடும் என்று விடுத்த அறிக்கையேயாகும்.

அதனையடுத்து சந்திரிகா - ரணில் ஆகியோருக்கிடையேயான கடிதப்பரிமாறல் பிரச்சினை, மேலும் இருதரப்பினருக்குமே சவால் நிலை தீவிரம் கொள்ள முனைப்புக்கொண்டது.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, திருகோணமலையின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து முழுமையாக ஆராய்வதற்கென, அங்கு நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டுள்ளதுடன் கடற்படைத்தளம், துறைமுகப்பகுதி ஆகியவற்றுக்கும் போய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியுமுள்ளார். அவர் கொழும்பு திரும்பியதும், அறிக்கையொன்றினை சந்திரிகாவிடம் கையளிப்பார்.

அவர் அளிக்கப்போகும் அறிக்கை எத்தகைய தன்மையைக் கொண்டதாக இருக்கும் என்பது குறித்து அதிகம் யோசிக்க வேண்டியதில்லை. நிச்சயம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப, ரணில் அரசின் தேசத்தின் பாதுகாப்பு குறித்த அக்கறையின்மையையும், பொறுப்பின்மையையும் - சந்திரிகா எதிர்பார்த்தவண்ணம், அவர் அரசுக்கெதிரான அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வேண்டிய சாதகமான காரணங்களை வலியுறுத்துவதாகவே அமையக்கூடும். அப்படி அமையவேண்டிய தேவை, எதிர்க்கட்சிக்கும் சந்திரிகாவுக்கும் அவசியமுண்டு. அவர்களின் எதிர்கால அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க அது மிகவும் முக்கியமானதாகும்.

மகிந்த ராஜபக்ஷ - திருகோணமலை கடற்படைத்தளத்தில் இரண்டுமணி நேரம் தரித்து நின்று, திருகோணமலையின் பாதுகாப்புக் குறித்து அம்மாவட்டததின் பாதுகாப்பு படைகளின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, முப்படைத் தளபதிகளும் உடனிருந்தனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பு நிலைமைகளுக்கு அச்சுறுத்தல் எதுவுமில்லை. நிலைமைகள் அமைதியாக உள்ளன என, தமது அபிப்பிராயங்களைக் கூறுவார்கள் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

ஏற்கனவே - கதிர்காமர் கூறியவற்றை அவர்கள் வலியுறுத்தவே செய்வர், அதுவே அவர்கள் மரபு.

ஆக, மகிந்த சமர்ப்பிக்கப்போகும் அறிக்கை - திருகோணமலைக்கு விடுதலைப் புலிகளால் முழுமையான ஆபத்து ஏற்படும் சாத்தியம் உள்ளது என்பதை வலியுறுத்துவதாகவே இருக்கும்.

அதனை வைத்தே ரணில் அரசின் எதிர்காலத்தை சந்திரிகா தீர்மானிக்கவும் கூடும். அதுமட்டுமல்ல சமாதான நகர்வுகளின் எதிர்காலத்தையும் கூட சந்திரிகாவின் அரசியல் மூலோபாயம் இதன் அடிப்படையில்தான் தீர்மானிக்கவும்கூடும்.

இது ரணிலுக்கும் தெரியும்.

சர்வதேச சமூகத்துக்கும் தெரியும்.

சிறிலங்காவின் மக்களுக்கும் தெரியும்.

ஏன் விடுதலைப் புலிகளுக்கும் இது மிகத் தெளிவாகவே தெரியும்.

ஆக, திருகோணமலை - இராணுவரீதியில் மட்டுமல்ல, அரசியல்ரீதியிலும்கூட சிறிலங்காவின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற கேந்திரமையமாகியுள்ளது.


சந்திரிகா என்ன செய்யப்போகிறார்? ரணில் சந்திரிகாவின் வியூகத்தை எவ்வாறு சந்திக்கப்போகிறார்?

திருகோணமலையை இலக்குவைத்து சிறிலங்காவைக் கையாளும் சர்வதேச மேலாதிக்கச்சக்திகள் எவ்வாறு இதனைக்கையாளப்போகின்றன?

அடுத்துவரும் வாரங்கள் சிறிலங்காவின் அரசியலில் திருப்பங்களை கொண்டுவரக்கூடும் என்ற ஊகங்கள் பரவலாக - பலவகையில் அடிபடும் சூழலில் -

சமாதானம் குறித்தும் வலியுறுத்தப்படுகிறது என்பது தான் விசித்திரமாக உள்ளது. பதட்டநிலையில் அமைதி சாத்தியமா? விடை தேடும் வினா இதுதான்!

## நாடும் நடப்பும்




# சமுதாயத்தை சீரழிவிலிருந்து காக்கும் பொறுப்பை சமூகமே கையில் எடுத்துக் கொள்ளவேண்டும்

### சனசமூக நிலைய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் பாலையா



எமது சமுதாயம் இன்று தனது பொறுப்புக்களிலிருந்து விலகிச் செல்கிறது., பொறுப்புக்களை ஏற்பதற்கும் பலர் அச்சப்படுகிறார்கள். இது வரவேற்கத்தக்கதல்ல என, யாழ்.மாவட்ட அரசியற்துறையைச் சேர்ந்த பாலையா தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில், நேற்று நடைபெற்ற வலிகாமக் கோட்ட சனசமூகநிலைய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் பிரதேச சனசமூகநிலைய சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடந்த இந்த விழாவில், பாலையா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று எமது சமூகம் பாரியதொரு சமூக, கலாசாரச் சீரழிவை எதிர்நோக்கியுள்ளது. சந்திக்குச்சந்தி இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் மலிந்துவிட்டன. இவற்றைக் கண்டும் எமது சமூகம் மௌனமாக இருக்கிறது. எமக்கு ஏன் தேவையில்லாத வேலையென ஒதுங்கிப்போகிறது.

சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்களின் பெற்றோர்கள்கூட, அவர்களைக் கண்டிக்கப் பயப்படுகிறார்கள். இந்தநிலை விரும்பத்தக்கதல்ல. சமுதாயத்தைச் சீரழிவிலிருந்து காப்பாற்றும் பொறுப்பை, சமூகம் கையில் எடுக்கவேண்டும். அது உங்களுடைய பொறுப்பு மட்டுமல்ல, கடமையும்கூட. சீரழிவுகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் எடுங்கள். உங்கள் பின்னே விடுதலைப் புலிகளாகிய நாங்கள் உள்ளோம். உங்களால் தீர்வுகாணமுடியாத பிரச்சினைகளுக்கு - நாம் தீர்வு காண்போம் எனத் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த சனசமூக நிலைய பிரதிநிதிகள் பலர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆனந்தன் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

கலந்துரையாடல் நிகழ்வின்போது,சனசமூகநிலையங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் தமது கோரிக்கைகளையும், கருத்துக்களையும் முன்வைத்தனர். இவையனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, தீர்வு காணப்படும் என, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி ஆசிரியைகள், அரச அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ச,91)

### லங்கா சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களை

# பணியில் இருந்து இடைநிறுத்த அரசாங்கம் மீண்டும் நடவடிக்கை!

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களைப் பணியிலிருந்து இடைநிறுத்த, அரசு மீண்டும் முயற்சிகளை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கடிதம் ஊழியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஊழியர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தொழில் திணைக்கள ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது.

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களை, சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்வதாக 2002 ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து, ஊழியர்கள் தொழில் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கு மீதான விசாரணைகள் முடிவுறாத நிலையிலேயே, மேலும் ஒரு லட்சம் ரூபாவை ஊழியர்களுக்கு வழங்கி, அவர்களை வேலையிலிருந்து நீக்க அரசு முயல்வதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறுமாறு கோரப்பட்டதாகவும், அதற்கு ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையினால், பணியிலிருந்து பலவந்தமாக இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை எதிர்த்து ஊழியர்கள் - தொழில் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகள், எதிர்வரும் 25 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இந்த நிலையிலேயே, மேலும் ஒரு லட்சம் ரூபாவை தருவதாகவும், அதனைப் பெற்றுக்கொண்டு, பணியில் இருந்து விலகும்படி ஊழியர்களிடம் கோரப்பட்டுள்ளது. அத்தோடு, அரசிற்கு எதிராகத் தாக்கல் செய்த மனுக்களையும் வாபஸ் பெறும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, ஊழியர்கள் தமது கையொப்பமிட்ட கடிதமான்றை, தொழில் துறை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளனர். இதில் தமக்கு நிறுவனம் தரவேண்டிய கொடுப்பனவுகள் பல மீதம் இருப்பதாகவும், அவற்றை முழுமையாகத் தராதபட்சத்தில் - தாம் வேலைநீக்கம் பற்றி சிந்திக்கமுடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள் பலர் பணியிலிருந்து நிரந்தரமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இதனை எதிர்த்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொ.ஐ.மு கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கூட்டுக்கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள இச்சந்திப்பில், பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தேசிய ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் சிறிலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜே.வி.பியுடனான கூட்டணி முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்தே, ஜனாதிபதி சந்திரிகா இந்தச் சந்திப்பினை ஏற்பாடு செய்துள்ளார்.

மாற்றுக் கட்சிகளுடனான கூட்டமைப்பினை உறுதிப்படுத்தி, புதிய தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனநாயகம் பற்றிப் பேசுவது வெறும் வாய்ச்சொல்தானா!

## ஜப்பானைக் கேட்கிறது ஈ.பி.டி.பி

ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி- ஜனநாயகரீதியாகச் செயற்படும் தமிழ் அரசியற்கட்சிகள் தொடர்பாக எதிர்மாறான அணுகுமுறையைக் கடைப்பிடித்தமையிட்டு, ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. இது குறித்து கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் சிரிசிரோ ஓட்சுகா அவர்களுக்கு விரிவான கடிதம், கட்சியின் சார்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

போர்நிறுத்த உடன்படிக்கையானது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின், குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதில் வலுவற்றதாக உள்ளது. இது அரசியல் பன்மைத்துவம் மற்றும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்கு இடமளிப்பதாக இல்லை.

போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்தனாது முதல், வடக்கு -கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதற்காகவும், ஜனநாயகம் மற்றும் அரசியல் பன்மைத்துவம் என்பவற்றை நிலைநாட்டுவதற்காகவும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் - வெகு சிரமங்களுக்கு மத்தியில் முன்னின்று தலைமை தாங்கி வருகின்றோம். இந்த இலக்கை நிறைவேற்றுவதற்காகவே இங்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசிவருகின்றோம்.

இந்த வகையில், உங்களைச் சந்தித்த சந்தரப்பங்களில் எல்லாம், எமது நிலைப்பாட்டைத் தங்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். இதற்காகவே கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதியன்றும் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியைச் சந்தித்து பேசுவதற்காக நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். கடந்த செப்டம்பர் 14 இல் புலிகளின் இரண்டாம் மட்டத்தினரை சந்திப்பதற்காகக் கிளிநொச்சிவரை விசேட தூதுவர் யசூசி அகாஷி சென்றார்.

அதைத் தொடர்ந்து கல்முனை மற்றும் அம்பாறை பகுதிகளுக்கும் விஜயம் செய்தார். அங்கு இடம்பெற்ற சந்திப்புக்களின்போது, ஈ.பி.டி.பி மற்றும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) பிரதிநிதிகள், திட்டமிட்ட வகையில் தவிர்க்கப்பட்டுள்ளனர். இக்கட்சிகள்தான் புலிகளின் பயங்கரவாதப் போக்குகளுக்கு எதிராக, துணிவுடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஓகஸ்ட் 19 ஆம் திகதியன்று நாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எழுதிய கடிதத்தில், வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டிருந்தோம்.

எனினும், விசேட தூதுவர் யசூசி அகாஷியின் விஜயம் - புலிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே திட்டமிடப்பட்டதாக எமக்குத் தோன்றுகிறது. கொழும்பில் எமது கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதோடு, கிழக்கில் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பும் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதனால், மனித உரிமைகள், ஜனநாயகம், அரசியல் பன்மைத்துவம் என்பனபற்றி ஜப்பான் போன்ற நாடுகளில் பேசுவது வெறும் வாய்ச் சொற்கள்தானா? என்ற சந்தேகம் எம்மவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது. எனவும் தெரவிக்கப்பட்டுள்ளது.

# க.பொ.த சாதாரணதர பரீட்சையில் 40 சதவீதமான மாணவர்களே சித்தி

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில், 40 வீதமான மாணவர்களே க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயில்வதற்கான தகைமை பெற்றுள்ளனர்.

ஆரம்ப வகுப்புக்களில் இடம்பெறும் இரட்டை வகுப்பு உயர்ச்சி வழங்குவது போன்றனவே, இந்த வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கல்வி அமைச்சு கணிப்பிட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் திறமையான மாணவர்கள் என்ற காரணத்தினால், ஒரே தடவையில் இரு வகுப்புக்களுக்கு உயர்த்தல் நிறுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் வெளியானதன் பின், மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்தே மேற்படி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

கல்விசாரா நடவடிக்கைகள், பாடசாலை நாட்களில் நடைபெறுவதும் - இந்த வீழ்ச்சிக்கு மற்றொரு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பாடசாலைகள் கண்டிப்பாக மாதத்தில் 20 நாட்கள் நடைபெறவேண்டுமென்றும், மேற்படி கல்விசாரா நடவடிக்கைகள் சனி, ஞாயிறு தினங்களிலேயே நடத்தப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறை, போதுமான ஏனைய வசதிகளின்மை போன்ற காரணங்களும் - மாணவர்கள் போதுமான அளவு சித்தியடையாமைக்குரிய காரணங்களாகும்.

கடந்த 5 வருடங்களாக வருடத்திற்கு 195 இற்கும் குறைவான நாட்களே பாடசாலை நடைபெற்றுள்ளது.

களியாட்ட விழா, பொருட்காட்சி, அகதி முகாம் போன்ற காரணங்களுக்காக, இனிமேல் பாடசாலைகள் மூடப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

## நூல் வெளியீட்டு விழாவும் கண்காட்சியும்

அஷ்டலஷ்மி பதிப்பகத்தின் 'ஆத்தி ஆடிக்கதை' வெளியீட்டு விழாவும், 101 சைவ நூல்களின் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, சைவ சித்தாந்த மன்றம் மலேசியாவில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(101)






எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை மாணவர்கள் மேற்கொண்ட கல்விச்சுற்றுலாவின் ஒரு கட்டமாக, நமது ஈழநாட்டிற்கு வருகைதந்திருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# குடாநாட்டு விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க வந்தோர் தென்னிலங்கை திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

தேசிய சமாதான விளையாட்டு விழாவை முன்னிட்டு, குடாநாட்டு விளையாட்டு வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை வழங்க வருகை தந்திருந்த தென்னிலங்கைப் பயிற்சியாளர்கள் - முற்றாகத் திரும்பியுள்ளனர்.

குடாநாட்டில் பெருமெடுப்பில் நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள இவ்விளையாட்டு விழாவில், குடாநாட்டு வீராங்கனைகளும் கலந்துகொள்ள ஏதுவாக, தென்னிலங்கைப் பயிற்சியாளர்கள்மூலம் பயிற்சிகளை வழங்க, விளையாட்டுத்துறை அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், யாழ். நகரப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலை விளையாட்டு மைதானங்களில் வைத்து, இந்தப் பயிற்சியாளர்கள் -உள்ளூர் வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வந்திருந்தனர்.

எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிப் பல மாதங்களைக் கடந்துள்ள போதிலும், மக்கள் இயல்பு வாழ்க்கையை உருவாக்க எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது, இவ்வாறான விழாக்கள்மூலம் போலியான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உள்ளூர் விளையாட்டு வீராங்கனைகள் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், தென்னிலங்கைப் பயிற்சியாளர்களால் வழங்கப்பட்ட பயிற்சிகளையும் அவர்கள் பகிஷ்கரித்ததையடுத்தே, பயிற்சியாளர்கள் குடாநாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

# சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டிய தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள்



செய்திக் கட்டுரை

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகள் காரணமாக, 1990 ஆம ஆண்டு காலப்பகுதியிலிருந்து, சொந்த இடங்களை விட்டு, உயிர் பிழைக்க இந்தியாவிற்குச் சென்ற மககள் - தற்போது நிலவுகின்ற சமாதானச் சூழல் காரணமாக மீண்டும் தங்கள் வாழ்விடங்களில் குடியேறவென கடல்வழியாக இந்திய மீன்பிடிப்படகுகள் மூலம் நெடுந்தீவிலும் மன்னாரிலும் வந்திறங்கினர்.

இவர்களை, இறங்குகின்ற பகுதி கிராம அலுவலர்கள் பொறுப்பேற்று, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று பின்னர், கடற்படையினர் விசாரணைகளை முடித்து, பிரதேச செயலர்கள் மூலம் மாவட்டச் செயலகங்களில் ஒப்படைக்கப்பட்டு, அங்கே அவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்காகப் போக்குவரத்துக்கென ஒரு தொகை பணமும் (1000 ரூபா) கொடுக்கப்பட்டு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இந்த வகையிலே திருப்தியுடன் மக்களும், அவர்களை அனுப்பிய திருப்தியில் அதிகாரிகளும் இருந்துவிடலாம். ஆனால், கடந்த 13 வருடகாலமாகப் போதிய சுகாதார வசதிகளோ, அடிப்படைத் தேவைகளோ இன்றி, அகதிமுகாம்களிலே தங்கியிருந்துவிட்டு இவர்கள் வருகிறார்கள். இவர்கள் அறிந்தும், அறியாமலும் பல தொற்று நோய்களுக்கு உள்ளாகியிருக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். ஆனால், இவர்களைச் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தி, சுகதேகிகள் என்ற ஒரு நிலையில், சொந்த இடங்களிற்கு அனுப்பும்போது, அவர்களுக்கும் நல்லது, இங்கு வசித்து வருபவர்களுக்கும் நல்லது.

இல்லையெனில், நம்மில் பலரைத் தொற்று வியாதிகளுக்குள் புதைத்துக் கொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும்.

கடல்வழியாக வருபவர்கள் தான். இருப்பினும், அவர்கள் எம் நாட்டவர்கள். மீண்டும் வருகிறார்கள். அவர்களுக்கான உதவிகளை அரச திணைக்களங்கள் செய்து வருகின்றன. ஆனால், சமாதான சூழல் ஏற்பட்டதன் பின்னர், இன்றுவரையும் நூற்றுக்கணக்கான மக்கள் இப்படி கடல்வழியாக மீன்பிடிப் படகுகள் மூலம் வந்துள்ளபோதும், இது தொடர்பாகச் சுகாதாரப் பகுதியினர் ஏதும் ஒரு நடவடிக்கை எடுக்க முயற்சித்தார்களா? என்றால், அது கேள்விக்குரியதாகவே உள்ளது.

அறிந்தும், அறியாமலும் பெற்றுக்கொண்ட தொற்று வியாதிகளால் பீடிக்கப்பட்டு மக்கள் வருவார்களேயானால், அதனால் இங்கு பல மக்கள் பாதிக்கப்படுவர். இதற்கு சுகாதாரப் பகுதியினர்தான் பொறுப்பேற்க வேண்டிய ஒருநிலை ஏற்படும். வந்து சேர்கின்றவர்களை அந்தப்பகுதி பொது சுகாதார பரிசோதகர்கள்கூட அணுகி, அவர்கள் தொடர்பாக அறிகின்றார்களா? என்பதும் கேள்விக்குரியதுதான்.

கடந்த இரு தசாப்த காலங்களுக்கு முன்னர்? கச்சதீவு திருநாளுக்கு மக்கள் செல்லும்போது, அவர்களுககுத் தொற்றுநோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர். ஏனென்றால், அப்போது இந்திய மக்களும் அங்கே வருவார்கள். அதனால், நோய்கள பரவலாம் என்ற ஒரு முன்னெச்சரிக்கையினால்தான்.

அன்று அதுவும் குறைந்தது ஒரு வார காலம் நடைபெறும் ஆலய விழாவிற்கு வரும் மக்களுக்கு, நோய தொற்று ஏற்பட்டால், நாட்டையே பாதிக்கும் என நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

ஆனால், தற்போது 13 வருட காலங்களின் பின்னர் அடிப்படை சுகாதார வசதிகள்கூட கிடைக்காத அகதிமுகாம்க்ளிலிருந்து வருகின்ற மக்களை - சுகாதாரப் பகுதியினர் கண்டும் காணாததுபோல் இருந்து வருவது ஒரு விசனத்திற்குரிய தொன்றாகும். எனவே, அனைத்து மக்களும் சுகநலமாய் வாழும்வகையில், சுகாதாரப் பகுதியினர் விரைந்து செயற்பட வேண்டிய ஒரு அவசிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**கண்ணன்**

# கொழும்புக் கூட்டத்தை பகிஷ்கரிக்க மீனவர் சங்கப் பிரதிநிதிகள் முடிவு!

குடாநாட்டு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவெனக் கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகரவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தை, பகிஷ்கரிப்பதென மீனவ சங்கங்கள் முடிவு எடுத்துள்ளன.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், குடாநாட்டைச் சேர்ந்த ஐம்பது மீனவர் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு, கடற்தொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ். அலுவலகமூடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டிலும் குடாநாட்டு மீனவர்கள் இவ்வாறு கொழும்பிற்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும், ஆனாலும், அந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்த மீனவர்களது கோரிக்கைகள் எவையுமே அமைச்சினால் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையெனவும், இம் மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. அத்துடன். கடந்த ஆண்டின் முற்பகுதியில் அமைச்சர் மகிநத விஜயசேகர - குடாநாட்டின் பல கரையோரப் பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்தார்.

இந்தநிலையில் தற்போது கொழும்பில் அழைக்கப்பட்டுள்ள மேற்படி கூட்டமும், வெறும் கண்துடைப்பு நிகழ்வாக இருக்குமென்பதாலேயே, அந்த நிகழ்வைப் பகிஷ்கரிக்கத் தாங்கள் முடிவு செய்துள்ளதாக, மீனவ சங்கப் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும், இக்கூட்டத்தில் மீன்பிடி மற்றும் கடற்தொழில் நீரியல்வளத்துறை திணைக்கள யாழ். அலுவலக அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 14 ஆண்டுகளாக விண்வெளியில் சுற்றிவந்த 'கலிலியோ' விண்கலத்தை அழிக்க உத்தரவு!

கடந்த 14 ஆண்டுகள் 'யூப்பிற்றர்' கிரகத்தை நோக்கி பிரயாணத்தை மேற்கொண்ட 'கலிலியோ' விண்கலத்தை அழித்து விடுவதற்கான கட்டளைகள் அந்த விண்கலத்துக்கு அனுப்பப் பட்டுள்ளது.

இந்த விண்கலத்திலிருந்து தகவல் பூமியை வந்தடை வதற்கு 52 நிமிடங்கள் எடுக்கும். இந்த விண்கலத்திலிருந்து இறுதித் தகவலைப் பெற்ற பின்னர், கலிலியோவிண் கலத்தை அழித்துவிடுவதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கோள்களை ஆராய்வதற்கு அனுப்பப்பட்டு, வெற்றிகரமாகச் செயற்பட்டு வந்த விண்கலமொன்றை அழிப்பது இதுவே முதற்தடவையாகும்.

கலிலியோ விண்கலம் - 1989 ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்ட காலத்திலிருந்து, இதுவரை பல முக்கிய தகவல்களை பூமிக்கு வழங்கியிருந்தது.

கலிலியோ விண்கலம் இதுவரை 3 பில்லியன் மைல்கள் விண்வெளியில் பிராயணம் செய்துள்ளது.

இக்கலம் தொடர்ந்து பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு தேவைப்படும் எரிசக்தி இல்லாமையினாலும், கலம் இறுதியில் 'யூப்பீற்றர்' கிரகத்துடன் மோதுவதைத் தடுப்பதற்காகவுமே, இந்த விண்கலத்தை அழித்து விடுவதற்கு நாசா முடிவெடுத்தது.

'கலிலியோ' விண்கலத்தின் திட்டமிடல் அதிகாரியான டொக்டர் கிளேடியா அலெக்சாண்டர், 'கலிலியோ' விண்கலம் - கோள்கள் தொடர்பாக விஞ்ஞானத்திற்கு பல அரிய பணிகளைப் புரிந்துள்ளதெனவும், இந்தக் கலத்தின் முடிவு கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.



இந்த விண்கலம் அழிக்கப்படுவதனால், வருங்காலத்தில் ஏனைய கோள்களில் உயிரினங்கள் இருக்கின்றனவா என்பதை அறிவதிலும், ஏனைய ஆராய்ச்சிகளுக்கும் பின்னடைவு ஏற்படலாமென விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அஹிலா அல் ஹசிமி மரணம்!



ஈராக்கை தற்போது நிர்வகிக்கின்ற கவுன்சிலின் அங்கத்தவரான அஹிலா- அல்- ஹசிமி வீட்டில் இருந்து வெளியில் வரும்போது, இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் சுடப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனளிக்காது நேற்று அவர் வைத்தியசாலையில் மரணமானார்.

ஈராக்கை ஆட்சி செய்யும் கவுன்சிலில் உள்ள மூன்று பெண் அங்கத்தவர்களில் - அஹிலா அல் ஹசிமியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிற்கான அமெரிக்க சிவில் நிர்வாக அதிகாரியான போல் பிறிமர் - இவரின் கொலையைக் கோழைத்தனமான செயல என விபரித்துள்ளார்.

இவர், சதாமின் ஆட்சிக் காலத்திலும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கொடிய தாக்குதல் அஹிலா - அல் ஹசிமிக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலல்ல. இது ஈராக்கிய மக்களுக்கு எதிரான - ஜனநாயக ஆட்சி ஒன்றை நிறுவுவதற்கு எதிரான தாக்குதலென, பிறிமர் கருத்துத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் - ஈராக்கில் இருந்து ஐக்கிய நாடுகள் செல்லும் குழுவின் ஒரு அங்கத்தவராக ஹசிமியும் இருந்தார். ஐக்கிய நாடுகள் சபையில் ஈராக்கும் அங்கம்வகிப்பதற்கான பேச்சுவார்த்தையில் இவர் ஈடுபடவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பலஸ்தீன தீவிரவாத அமைப்பான

# 'அல் அகுசா மாட்ரைஸ் பிரிகேட்' இன் உள்ளூர் தலைவர் சுட்டுக்கொலை!



பலஸ்தீன தீவிரவாத அமைப்பான 'அல் - அகுசா மாட்ரைஸ் பிரிகேட்' அங்கத்தவர்களுக்கும், அதன் எதிர் குழுக்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் - அல் அகுசா அமைப்பின் உள்ளூர் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் - வேறொரு துப்பாக்கிதாரியால் கொல்லப்பட்டார். இவர்களின் கொலைக்கான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை.

பலஸ்தீன தலைவர் அரபாத்தின் 'பர்ரா' இயக்கத்திலிருந்து விலகியவர்களால் உருவாக்கப்பட்தே 'அல் அகுசா' அமைப்பாகும். ஆனால், 'அல் - அகுசா' இயக்கத்தை அரபாத் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தீவிரவாதிகளுக்கு உதவுவதாக

# அமெரிக்கா கூறிய குற்றச்சாட்டை சவூதி அரேபியா மறுத்துள்ளது!

சவூதி அரேபியா - தீவிரவாதிகள் தங்குவதற்கு இடமளித்துத்து வருவதாக அமெரிக்கா தெரிவித்த குற்றச்சாட்டை, அமெரிக்காவுக்கான சவூதித் தூதுவர் பின் அப்துல் அஸீஸ் மறுத்துள்ளார்.

சான் பிரான்சிஸ்கோவில் நடந்த வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான மாநாட்டில், தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு சவூதி தகுந்த நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமெரிக்காவுக்கான சவூதி தூதுவர், மேற்கு உலக ஊடகங்கள் - சவூதியில் உள்ள எல்லோரும் அல்கொய்டா இயக்கத்துக்கும், அதன் தலைவர் ஒஸாமா பின்லேடனுக்கும் ஆதரவு அளிப்பதாக பொய்யான தகவலை வெளியிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 இல் நடத்த தாக்குதலில் ஈடுபட்ட 19 பேரில், 15 பேர் சவூதியைச் சேர்ந்தவர்க்ள் எனக் கூறப்படுகிறது. இதனால் இருநாடு நாடுகளுக்குமடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

### உளவுபார்த்தார் என்க்கூறி

# அமெரிக்க படையில் பணிபுரியும் இஸ்லாமியச் சிப்பாய் கைது!

(வோஷிங்டன்)



அமெரிக்கப் படையில் பணிபுரியும் இஸ்லாமியப் படைச் சிப்பாய் 'யூசெய் யீ- செப்ரெம்பர் 10 ஆம் திகதியிலிருந்து, அல் கொய்டா இயக்கத்திற்கு உளவுத் தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் - தெற்குக் கரோலினாவிலுள்ள கடற்படைத் தடுப்புமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

குஅன்ரனமோ தீவில் தடுத்துவைக்கப்பட்ட அல் - கெய்டா தீவிரவாதிகளுடன் தகவல் பரிமாற்றங்களுக்கு உதவிபுரிந்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டு, இராணுவ அதிகாரிகளினால் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்பட்ட நேரத்தில் - இவரிடம் இருந்த ஆவணங்களில் 'அல் - கொய்டா' தீவிரவாதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தடுப்புமுகாம் தொடர்பான வரைபடங்கள், கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள், அவர்களை விசாரணை செய்த அதிகாரிகளின் பெயர் விபரங்கள் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

600 இற்கு மேற்பட்ட 'அல் - கொய்டா' சந்தேக நபர்களும், ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சிக் காலத்து அங்கத்தவர்களும் 'காம் டெல்ரா' என்னும் இடத்தில் அமைந்துள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




தமிழ்நாட்டுக்கு இங்கிருந்து அகதிகளாகச் சென்று, தஞ்சம் புகுந்து தங்கியிருந்தவர்களில் சிலர் அங்கிருந்து 'கள்ளத்தோணிகளில் கொஞ்சம் கொஞ்சமாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் வரும் தோணிகள் இந்தியக் கடலோரக் காவற்படையினரிடம் பிடிபட்டால் படகுக்காரர்களுக்குத் தண்டனை தப்பாது.

முன்னர் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குப் படகுகளில் அகதிகளைக் கொண்டுபோய் இறக்கிய படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. படகோட்டிகள் தண்டனை பெற்றனர்.

இவற்றிலிருந்து தப்புவதற்காக குழந்தைகள் பெண்கள் உட்படப்பலர் கடலில் தெரியும் திட்டியில் கடலுக்குள்ளேயே இறக்கிவிடப்பட்டனர். இதனால் உயிர்ப்பலியும் ஏற்பட்டது. இப்படிப்படகுகளில் அகதிகளாக அங்கு போய்ச்சேர்வதற்குப் பெருந்தொகைப் பணத்தையும் இவர்கள் செலவிட்டனர்.

இப்பொழுது இலங்கையில் நிலவும் போர்நிறுத்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து அகதிகளில் சிலர் அங்கிருந்து கள்ளத் தோணிகளிலேயே திரும்பிவரத் தொடங்கியிருக்கின்றனர்.

இதேசமயம் இலங்கை அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி டில்லியிலுள்ள மத்திய அரசை தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டிருக்கிறார்.

இதுபற்றி டில்லி இன்னும் ஆராய்ந்து முடிவெடுக்கவில்லை. இனித்தான் இதுபற்றி டில்லி யோசிக்க வேண்டும்.

இலங்கை வந்த இந்திய இராணுவம் (அமைதிப் படை) இந்தியா திரும்பியபோது வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாளும் அவரது வடக்கு - கிழக்கு மாகாணசபையை அமைத்தவர்களும், அவர்களுக்கு ஆதரவாக இருந்து தமிழ்த்தேசிய இராணுவத்தை அமைத்த அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்தியாவுக்குச் சென்றனர்.

இவர்களைத் தமிழ்நாட்டில் இறக்கவேண்டாமென அன்றைய தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி தடுத்து விட்டதால் இவர்கள் ஒரிஸாவில் இறக்கப்பட்டனர்.

பின்னர் - இவர்களில் பலர் படிப்படியாகத் தமிழ்நாட்டுக்கு வந்து குடியேறி அகதிகளாக இருக்கின்றனர்.

வரதராஜப்பெருமாள் ராஜஸ்தானில் மாளிகை, தோட்டம், பாற்பண்ணை என்று வசதிகளுடன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்கிறாராம்.

"வரதராஜப்பெருமாளைப் போல் நான் நாட்டை விட்டு ஓடமாட்டேன்" என்று சமீபத்தில் டில்லி போய்த் திரும்பிய டக்ளஸ் தேவானந்தா சொன்னதிலிருந்து வரதரின் வசதிபற்றிக் கூறப்படுவதில் உண்மையிருக்கலாம்!

அவுஸ்திரேலியாவிலும் வரதர் தமது குடும்பத்தைக் காலூன்றச் செய்திருப்பதாக, இவர் கூட்டு வைத்திருக்கும் மற்றோர் அமைப்பின் பிரமுகர் தெரிவிக்கிறார்.

என்றாலும், கொழும்புக்கு வந்து இடையிடையே அறிக்கைவிடுவதன் மூலம் இங்கு எஞ்சியிருக்கும் தமது அணிக்கும் கூட்டணிக்கும் (நால்வர்) தமது இருப்பை வெளிப்படுத்திக்கொள்கிறார். இவர் இல்லாமல் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தூதுவர்களை இந்த உதிரிகள் சந்திக்கும் போது மூவர் கூட்டணி, (ஈரோஸ் - தலைவர், உறுப்பினர்) இல்லாதுபோனால் இருவர் அணி ஆகிப்பலம் குறைந்து விடுமல்லவா?

ஒரிஸாவிலிருந்து எல்லை கடந்து வரும் இலங்கை அகதிகள். இவைதவிர, இலங்கையிலிருந்து சிறிலங்கா இராணுவம் கடற்படை, விமானப்படையின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக இந்திய மண்ணைப் பற்றி எதுவும் தெரியாமலேயே உயிரைப் பாதுகாப்பதற்காக இந்தியாவுக்குப் போய்ச்சேர்ந்த அகதிகள் பலர். இவர்கள் தமிழக அரசு அகதிமுகாம் என்ற பெயரில் அமைத்துக்கொடுத்த கொட்டகைகளில் அனுபவிக்கும் இன்னல்களும், அதிகாரிகளின் கொடுமைகளும், காவல்துறையினரின் அடாவடிகளும் சொல்லிலடங்கா!

இந்த அகதிகள்தான் கள்ளத்தோணிகளில் இப்போது நாடு திரும்ப முயற்சிக்கிறார்கள். இவர்கள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்து அரசு மூலமே திரும்பினால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள்.

இப்படிச் செய்யலாம். அதற்கும் அங்குள்ள அரச ஊழியர்களும், காவல்துறையினரும் இலகுவாக வாழ விடுவார்களா? இருக்கும் சில்லறைகளையும் கூட முடிச்சு அவிழ்த்தால்தான் எதுவும் நடக்கும்.

இதை அகதிகள் தவிர, தமிழ் நாட்டுக்குள் நுழைந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகள் சிலரும்கூட கள்ளத் தோணிகளில் திரும்ப எத்தனிக்கின்றனர்.

இவர்கள் முறையாகத் திரும்ப வேண்டுமெனில் தாசில்தாரர் அறிக்கை, கலெக்டர் அறிக்கை, இவற்றுக்குமேலால் காவல்துறையின் 'கியூ'பொலிஸ் அறிக்கை, சாஸ்திரிபவன் அனுமதி ஆகியவற்றுடன் இறுதியில் சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதரகத்தில் அவசர காலக்கடவுச்சீட்டுப்பெற வேண்டும்.

இத்தனைக்கும் ஒவ்வொரு இடத்துக்கும் அலைச்சல் உலைச்சல், செலவு என்று நினைத்துப் பார்க்க முடியாத செலவு!

இதற்காகத்தான் உயிரைப் பணயம் வைத்துக் கள்ளத்தோணியில் வர எத்தனிக்கிறார்கள்.

இலஞ்சத்துக்குத் தமிழ்நாடு அலுவலகங்கள் பெயர் பெற்றவை என்பதை தமிழ்சினிமாப்படங்கள் அன்று முதல் இன்றுவரை எடுத்துக்காட்டுவதால் என்ன புண்ணியம்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி



ஜே.வி.பியின் துணையின்றி தனியாக தேர்தலில் போட்டியிட்டு ஐ.தே.கட்சியை வெல்லவோ அரசைக் கைப்பற்றவோ முடியாதென்று, அண்மையில் அதாவது ஜே.வி.பியுடனான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டணி முயற்சி தோல்வி கண்டதும், அநுரா பண்டாரநாயக்க கூறியிருந்தார்.

அது அநுராவின் பலவீனத்தை வெளிக காட்டியதா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின கையறு நிலையைக் காட்டியதா அல்லது ஜே.வி.பியின் பலத்தைச் சுட்டிக்காட்டியதா?

எதுவானாலும் சந்திரிகா அதனால் எரிச்சல் அடைந்துள்ளார் போல் தெரிகிறது.

மேற்படி தொனியில் கருத்துக்கள் எதனையும் எந்த ஒரு எம்.பியும் தொகுதி அமைப்பாளரும் கூறக்கூடாது. அப்படிக் கூறினால் கடும் நடவடிக்கையை எடுப்பேன் என்கிறார் இப்போது சந்திரிகா.

அப்படியானால், அநுரா மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியது தானே!

'சீச்சீ... அவர் எம்.பி. மட்டுமல்ல தம்பியும் கூட...அமைப்பாளர் மட்டுமல்ல... ஆலோசகரும்கூட...நடவடிக்கையெல்லாம் மற்றவர்களுக்குத்தான்' என்கிறார் ஒரு அரசியல் அவதானி...

'உனக்கல்ல உபதேசம்... எல்லாம் ஊருக்குத்தான்' என்ற கதைதான் எல்லா இடமும் நடக்கிறது.

-தெருவாசி

# யாழ். வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தினைக் கைவிட்டு மாற்றுவழிகளில் போராடவேண்டும்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு, மாற்றுவழிகள் மூலம் தமது கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் உரியபயனை அடையவேண்டும் என, பொதுமக்கள் எதிர்பார்ப்பதாக யாழ்.மாவட்ட வெகுஜன அமைப புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் சுகாதார ஊழியர்களது வேலைநிறுத்தம் - பொதுமக்களுக்கான மருத்துவ சேவையுடன் பின்னிப் பிணைந்துள்ளமையால், நோயாளர்கள் சொல்லொணா இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

இவர்கள் போராட்டம் ஊதிய உயர்வு சம்பந்தமானது. இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாக - ஊதிய உயர்வுக் கோரிக்கை நியாயமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

யாழ். குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி, மேலதிக சிகிச்சைக்காக வன்னியிலிருந்து வரும் மக்களும் வேலைநிறுத்தத்தால் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

மக்களின் மருத்துவத் தேவைகளைக் மனதில்கொண்டு, யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் தமது பணிகளுக்குத் திரும்புவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார ஊழியர்களது நியாயமான கோரிக்கைகள் வெற்றிபெற நமது ஆதரவினைத் தெரிவித்துக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியமும் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும்போது, ஓய்வூதியர்களுக்கும் உரிய அதிகரிப்பு வழங்கப்படும் என்று, பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபய வர்த்தனா தெரிவித்துள்ளார்.

4500 ரூபாவுக்கு குறைவாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அதிகரிக்கும் சம்பளத்தில் - 75 வீதத்தையும், 4500 ரூபாவுக்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுபவோருக்கு 70 சதவீதமும் கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியாவிலிருந்த ஈழ அகதிகள் 19 பேர் தலைமன்னார் திரும்பினர்

இந்தியாவிலிருந்து 19 அகதிகள், கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னாரை வந்தடைந்தனர். இவர்களை தலைமன்னார் கடற்படையினர் பொலிஸாரிடம் கையளித்தனர்.

தலைமன்னார் பொலிஸார், அன்றையதினமே - மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது இவர்களை விடுதலை செய்யுமாறு கூறிய நீதிபதி, இவர்களை ஏற்றிவந்த இயந்திரப் படகோட்டி ஒருவரையும், மன்னார் பேசாலையைச் சேர்ந்த ஒருவரையும் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (201)

### விசாரணையை...

மாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோருவதென்றும்,

இந்த மறியல் போராட்டத்துக்கு- பொதுஅமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள், சர்வதேச மாணவர் பேரவை போன்றவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெறுவதென்றும், பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (111)

### ஜே.வி.பி. தலைமையிலான...

பொதுவுடமைவாதிகளின் அமைப்பு, சிங்கள கலாசாரக் குழு என்பனவும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

சுமார் 300 பேர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குகொண்டிருந்ததாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையை விடுதலைப் புலிகளின் கையளிப்பதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டுமென, ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

சுமார் 3 கிலோமீற்றர் தூரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில், அங்குகூடியிருந்தவர்களிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் உரையாற்றிய ஜே.வி.பியின் சர்வதேசப் பிரதிநிதி,

தற்போது நாடு மிகவும் அபாயகரமான நிலையிலுள்ளது. விடுதலைப் புலிகள் நாட்டைப் பல பாகங்களாகப் பிரிக்க முயல்கின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது கட்சியினரும் நாட்டுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். நாட்டை ஒற்றுமைப்படுத்தக்கூடிய தேசபக்தர்களே தற்போது எமக்குத் தேவை.

ஜப்பானும், நோர்வேயும் புலிகளின் கோரிக்கைக்கு இணங்கி, நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டன. இவர்களது கோரிக்கைகளுக்கெல்லாம் அரசாங்கம் செவிசாய்க்ககூடாது என்றார்.

இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து நடத்தப்படும் என, ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

### இறுக்கமாக...

மான சக்திகளின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்தார்.

இவ்வாறான குழப்பகரமான பின்னணி ஏற்பாடுகள், சமாதான முயற்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பது உண்மையான விடயம். சர்வதேச சமூகமும் குறிப்பாக - அமெரிக்காவும் சமாதான முயற்சிகளில் கரிசனை கொள்வதை நாம் புரிந்துகொள்கின்றோம். ஆகவே, எமது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நாம் பூரண ஒத்துழைப்பைப் பெறவிரும்புகின்றோம்.

இதனைக் குழப்புகின்ற சக்திகள் திட்டமிட்ட ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழியைச் சுமத்தி தமிழீழ விடுலைப் புலிகள் மீது உருவாகின்ற சர்வதேச அபிப்பிராயத்தை சீர்குலைக்கின்ற நோக்கோடு செய்யப்படுகின்ற உண்மை நிலையை புரிந்துகொள்ள வேண்டுமென தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்தார்.

## வைத்தியசாலைப் பணிகளில் ஐயாயிரம் படையினர் ஈடுபாடு

சுகாதார ஊழியர்களின் நாடுதழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தையடுத்து, ஏறத்தாழ முப்படைகளையும் சேர்ந்த ஐயாயிரம் படையினர் வைத்தியசாலைகளில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வைத்தியசாலைச் சேவைகள் தொடர்ந்தும் சுமுகமாக இயங்குவதற்காகவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து இராணுவப் பேச்சாளரான கேணல் சுமேதா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் -

இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் வைத்தியர்கள், தாதிகள், தொழில்நுட்ப அலுவலர்களும் அடங்குவர்.

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தே, இவர்கள் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கெதிராக முறைப்பாடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றார்.

கடற்படையினரும் தமது சாரதிகள், சமையல்காரர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது என, தெரிவித்த கடற்படை பேச்சாளரான கப்டன் ஜெயந்த பெரேரா -

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடருமானால், மேலதிகமாக கடற்படையினரை சேவையில் ஈடுபடுத்த கடற்படை தயாராகவே உள்ளதெனத் தெரிவித்தார்.

விமானப்படை லிங்கொமாண்டர் அஜந்த சில்வா கருத்துத் தெரிவிக்கையில் -

எமது படைப் பிரிவைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதிகள், தொழில்நுட்ப அலுவலர்கள் என 400 பேர் ஏற்கனவே - நீர்கொழும்பு, மாரவில, சிலாபம், தியத்தலாவ, களுத்துறை, பொலனறுவை ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 83 பேரும் வைத்தியசாலைகளில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக பொலிஸ் அதிகாரியான றியன்ஸி பெரேரா கூறுகையில் -

இதுவரை சட்டத்துக்கு முரணான, பிரச்சினைக்குரிய சம்பவங்களோ, வ்ன்செயல்களோ இடம்பெற்றதாக முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

### இறுதி முடிவுகள் பற்றி ...

அங்கத்தவர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோருடன், சர்வதேச விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் கலந்துகொள்ள வாய்ப்பிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில், தாம் சமர்ப்பிக்கப்போகும் புதிய இடைக்கால நிர்வாக அலகு, மிகவும் யதார்த்தமானதாகவும், நாட்டின் அனைத்து மக்களின் நலன்களையும் பேணும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும், சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## களவாடப்பட்ட பொருட்கள் தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் அதிகாரியின் யாழ் கோவில் வீதியிலுள்ள வசிப்பிடத்திலிருந்து பின்வரும் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இவற்றின் விலை பெறுமதியைவிட உணர்வுபூர்வமான பெறுமதி அளவிடமுடியாதது. எனவே எந்த விலை கொடுத்தும் இவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார் இதனை இழந்த குறிப்பிட்ட வெளிநாட்டுப் பணியாளர்.

இவை தொடர்பாகத் தகவல் தரக்கூடியவர்களுக்கு உரிய சன்மானம் வழங்கப்படும்.

பொருள்கள் விபரம்

NIKON - நிக்கொன் கமரா *Model* : FM 2
தொடர் இல : N 8651538

SAMSUNG - சம்சுங் வீடியோகமரா *Model* - VP - L 610 DPAL
தொடர் இல : 67 CR 500 259

NOKIA - நொக்கியா கையடக்கத் தொலைபேசி
*Model* 3310
தொடர் இல : IMEI : 350608601369677

தகவல் தெரிந்தவர்கள்
பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்புகொள்ளவும்

021 - 222 2635, 021 - 222 6011

(சி-1576)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.